# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 58.50 தபாற் செலவு : ரூபா 18.00

## 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி அத்தாட் சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 52/ 2001
4736

### 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 2003 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் விரிவுப்பெய ரானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் விரிவுப்பெயர் அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப்பெயரை மாற்றீடு செய்தல்.

"கட்டிடங்களிலுள்ள கூட்டாட்சிச் சிறுகூறுகள் தொடர்பிலான உரித்துக்களைப் பதிவுசெய்வதற்கும், அவற்றோடு இணைந் துள்ள பொது அம்சங்களுடன் கூட்டாட்சியாதனச் சிறுகூறு களாகக் கட்டிடத்தைத் துணைப்பிரிவாக்கஞ்செய்வதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய சிறுகூறுகள் தனித்தனியாகச் சொத்தாண்மை செய்யப்படு வதற்கும் அவற்றுக்கான உரித்துக்கள் கையுதிர்க்கப்படுவதற் கும் இயலச்செய்வதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2-H 018539 - 1,250 (2003/06)

"சட்டத்தின் ஏற்புடைமை.

2. இச்சட்டமானது —

(அ) (இதனகத்துப்பின்னர் "கூட்டாட்சி ஆதனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரே காணித்துண்டாக வைத்திருக்கப்படுவதும் சிறுகூறுகளாக உபபிரிவாக்கஞ் செய்யப்படக்கூடியதுமான பராதீனப் படுத்தப்பட்ட காணிமீது கட்டியமைக் கப்பட்ட ;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரே காணித்துண்டாக வைத்திருக்கப்படுவதும் சிறுகூறுகளாக உபபிரிவாக்கஞ் செய்யப்படக்கூடியது மான பராதீனப்படுத்தப்பட்ட காணிமீது கட்டியமைக்கப்பட உத்தேசிக்கப் பட்ட ;

(இ) (இதனகத்துப்பின்னர் "பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒரே காணித்துண்டாக வைத்திருக்கப்படுவதும் இருப்பாட்சி செய்வதற்குப் பொருத்தமான ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிமுடிக்கப்பட்ட கூட்டாட்சி யாதனச் சிறுகூறுகள் காணப்படுவனவு மான பராதீனப்படுத்தப்பட்ட காணிமீது பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட.

ஏதேனும் கட்டிடத்துக்கு, ஏற்புடையதாதல வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கூட்டாட்சியாதன வரைபடத்தை தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்தல்.

3. (1) விடயத்துக்கேற்றாற்போல, ஏதேனும் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது ஏதேனும் தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது ஏதேனும் பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரர், விடயத்துக்கேற்றாற் போல, கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்வதற்காக, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து பதிவாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) இரண்டாம் பிரிவின்கீழ் உபபிரிவாக்கஞ் செய்யப்படக்கூடிய கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடமொன்று காணப்படுவதும், இருப்பாட்சி செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்குப் பொருத்தமானதென கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொதுமுகாமையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் காணித்துண்டின் சொந்தக்காரர், எந்நேரத்திலேனும் அவர் விற்பனை செய்திருந்தால் அல்லது விற்பனை செய்ய உடன்பட்டிருந்தால்,

(அ) அத்தகைய முதலாவது விற்பனையின் அல்லது விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையின் தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்குள்ளாக அல்லது அத்தகைய கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக, இவற்றுள் எது முந்தியதோ அதற்குள்ளாக ;

(ஆ) கட்டிடத்தின் ஏதேனும் சிறுகூறின் விற்பனையின் அல்லது விற்பதற்கான உடன்படிக்கையின் முதலாவது அத்தகைய விற்பனை அல்லது விற்பதற்கான

உடன்படிக்கை, அத்தகைய கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்ட தேதியின் பின்னர் இடம்பெறுமாயின், அத்தகைய கட்டி முடிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக,

விடயத்துக்கேற்றாற்போல (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள்ளாக, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன், அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்பட வேண்டிய கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்வதற்காகப் பதிவாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) (அ) சொந்தக்காரர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக விண்ணப்பமொன்றைச் செய்யத் தவறுகின்ற விடத்து, அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் நோக்கத்திற்காக, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொதுமுகாமையாளருக்கு விண்ணப்பமொன்றை செய்து குறித்துரைக்கப்பட்ட காலப் பகுயின் நீடிப்பொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ஆ) பந்தி (அ) என்பதன்கீழ் சொந்தக்காரரால் பொது முகாமையாளருக்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டவிடத்து, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொதுமுகாமையாளர் பதிவாளருடனான கலந்தாலோசனையுடன் ஆறு மாதங்களுக்கு மேற்படாத மேலுமொரு காலப் பகுதிக்கு கால நீடிப்பு வழங்கலாம்.

(4) விடயத்திற்கேற்ப, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை அல்லது (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்ப

ளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கும் அவ்வாறு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர், அத்தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத மேலதிக குற்றப் பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ, மற்றும் 3இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

**5.** மூன்றாம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ, 3ஆ மற்றும் 3இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

3அ. (1) (அ) கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், முப் பிரதிகளில் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய விண்ணப்பத்தின் "மூலப்பிரதி" யும், "இணைப்பிரதி"யும் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் "மூன்றாவது பிரதி" கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபையின் பொதுமுகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ;

(ஆ) திட்டமிடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட, முப்பிரதிகளிலான, கட்டிட வரைபடம் ;

(இ) ஐந்தாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டுள்ள, முப்பிரதிகளிலான, கூட்டாட்சியாதன வரைபடம் ;

(ஈ) அனுமதி வழங்கப்பட்ட தேதியையும், அதன் தொடர்பு எண்ணையும் சுட்டிக் காட்டி, எவ்வரைபடங்களையும் விவரக் குறிப்புகளையும் குறிப்பீடுசெய்வதன் மூலம் அத்தகைய அனுமதி வழங்கப்

பட்டதோ அத்தகைய வரைபடங்களுக்கும் விவரக்குறிப்புகளுக்கும் இணங்கக் கட்டிடம் கட்டப்பட்டதெனப் பயன்படும், பதிவுபெற்ற கட்டிடக்கலைஞரிடமிருந்து அல்லது பதிவுபெற்ற குடியியல் அல்லது கட்டிட அமைப்பியல் பொறியியலாளரிடமிருந்து பெறப்பட்ட, சான்றிதழொன்று;

(உ) பின்வரும் நன்மைகளுக்கு உரித்துடையவரான ஆள், எவரேனும் இருப்பின், அவ்வாள் ஒவ்வொருவரினதும் எழுத்திலான சம்மதம் :—

(i) காணிமீதான ஈறாக்கீடு ;

(ii) அக்காணி முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் குத்தகை ;

(iii) அத்தகைய குத்தகைமீதான ஈறாக்கீடு ; அல்லது

(iv) காணிமீது அல்லது அத்தகைய குத்தகைமீது ஒரு சேர்ந்தை ;

(ஊ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள எந்த உள்ளூர் அதிகாரசபையின் எல்லைகளுக்குள்ளாகக் காணி அமைந்துள்ளதோ அந்த உள்ளூர் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட இசைவுச் சான்றிதழ் ;

(எ) காணித்துண்டுக்கான உரித்துச் சான்றிதழ் :

ஆயின், எவ்வாறாயினும், காணித்துண்டுக்கான உரித்துச் சான்றிதழ் சொந்தக்காரரின் உடைமையில் இல்லாது, ஆனால் வேறோராளின் உடைமை

யில் இருக்கின்றவிடத்து, அத்தகைய வேண்டுகோளில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக உரித்துப்பதிவாளரிடம் அச்சான்றிதழைக் காண்பிக்குமாறு அத்தகைய சொந்தக்காரரினால் அத்தகைய வேறு ஆள் மீது சேர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளின் பிரதி அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் :

(ஏ) (i) பதிவுசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டாட்சியாதனத்தின்மீது ஈடொன்று இருக்கின்றவிடத்து —

(அ) கூட்டாட்சி ஆதனத்தை ஈடுவைப்பதன் மூலம் ஏற்கனவே பெறப்பட்ட நிதிகள் மற்றும் அத்தகைய நிதி நிறுவனத்தின் பெயர் :

(ஆ) மேற்சொல்லப்பட்ட ஈட்டின்கீழ் கடனாகப் பெறப்பட்ட மொத்தப் பணத்தொகையும் பதிவு செய்யப்பட்ட உத்தேசிக்கப்பட்ட அத்தகைய கூட்டாட்சியாதன வரைபடம் ஒவ்வொன்றுக்கு எதிராகவும் பிணைப்பொறுப்பாக்கப்பட்ட பணத்தொகையும்.

என்பன தொடர்பிலான விவரங்களைக் கூறும் விண்ணப்பகாரரினால் செய்யப்படும் வெளிப்படுத்துகை ஒன்று :

(ii) பதிவுசெய்யப்பட்ட உத்தேசிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின்மீது அத்தகைய ஈடு எதுவும் இல்லாதவிடத்து, சொந்தக்காரர் அப்பயன்படும் கூற்றொன்றைச் செய்தல் வேண்டும் :

(ஐ) கட்டடத்திலுள்ள கூட்டாட்சியாதனச் சிறு கூறுகளினது இருப்பாட்சியாளர்களின் நன்மைக்கும் நலனுக்குமென ஏற்பாடுசெய்யப்பட்ட பொது வசதிகள் திருப்திகரமானவை எனவும் கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, நிருவாகம், பராமரிப்பு அல்லது முகாமை தொடர்பில் செய்யப்பட்ட ஒழுங்குகள் திருப்கரமானவை எனவும் அத்தாட்சிப்படுத்திக் கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொதுமுகாமையாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(ஒ) விண்ணப்பகாரரினாற் செய்யப்பட்டு பகிரங்க நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்று : அது பின்வருவனவற்றை அடக்கியிருத்தல் வேண்டும்:—

(i) நிலவுடைமை அளவீட்டுப் படத்தைக் குறிப்பீடுசெய்வதன் மூலம், காணித்துண்டு அமைந்துள்ள நிருவாக மாவட்டம், பெரும்பாக அரசிறை அலுவரின் பிரிவு, கிராமம், வட்டாரம், பற்று, கோறளை அல்லது வேறு பிரிவு அல்லது மாவட்டம் என்பவற்றைக் குறிப்பிட்டுக் கட்டிடம் அமைந்துள்ளதும் உரித்துக் கோரப் படுகின்றதுமான காணித்துண்டினதும் அதன் எல்லைகளினதும், பரப்பளவினதும், அமைவிடத்தினதும் விவரணம் ; காணித்துண்டானது பட்டினமொன்றில் அமைந்துள்ளவிடத்து, மதிப்பீட்டிலக்கத்துடன் அது அமைந்துள்ள தெருவின் பெயர் ஏதேனும் இருப்பின், அது என்பன ;

(ii) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரரின் அல்லது சொந்தக்காரர்களின் பெயரும் முகவரியும் ;

(iii) உரித்துக்கான உரிமைக்கோரிக்கைக்கு ஆதாரமாக விண்ணப்பகாரர் நம்பியிருக்கும் உறுதிகளினதும் சாதனங்களினதும் அல்லது வேறு ஆவணங்களினதும் உரித்துக்கான வேறு சான்றினதும் விவரங்கள் ;

(iv) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச்சட்டத்தின் உரித்துப் பதிவுசெய்யப்பட்டுள்ள பிரிவு, தொகுதி, இருமடித்தாள் இலக்கம் என்பன பற்றிய குறிப்பீடொன்றும், காணித்துண்டு அவ்வாறு பதிவுசெய்யப்பட்டிராவிடின், காணித்துண்டு அவ்வாறு பதிவுசெய்யப் படவில்லையென்ற பொருள்படவுள்ள வெளிப்படுத்துகையொன்றும் ;

(v) விண்ணப்பகாரரின் அறிவுக்குட்பட, காணித்துண்டைப் பாதிக்கும் ஒவ்வொரு பாரபந்தம், முடிவுறா வழக்கு, கைப்பற்றுதல், கட்டளை அல்லது தீர்வை பற்றிய விவரங்கள் ;

(vi) மாடிகளினதும் நிலவரைகளினதும் எண்ணிக்கையையும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடும் கட்டிடத்தின் விவரணமொன்று ;

(vii) ஒவ்வொரு கூட்டாட்சியாதன சிறுகூற்றையும் அடையாளங் கண்டுணருவதற்கான இலக்கம் அல்லது வேறு அடையாளம், அத்துடன் அதன் அமைவிடம், தள இடப்பரப்பு, அறைகளின் எண்ணிக்கை, அதனூடாகச் செல்லக்கூடிய ஏதேனும் அண்மையிலுள்ள பொது இடப்பரப்பு,

துணைச் சிறுகூறு, ஏதேனும் இருப்பின், அது; தொடர்பிலான நேரொத்த தகவலுட்பட, அடையாளங் கண்டுணரும் நோக்கத்துக்கான வேறு ஏதேனும் தகவல் என்பன பற்றிய கூற்றொன்று :

(viii) கூட்டாட்சியாதனத்துக்கான பொது அம்சங்கள் பற்றிய விவரணமொன்று ;

(ix) கூட்டாட்சியாதனத்தின் துணைச் சிறுகூறுகள் குறித்துரைக்கப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்கு அருகமைந்துள்ளனவா அல்லவா என்பதைப் பொருட்படுத்தாது, அக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள், எக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்குச் சேர்ந்தவையாக ஆக்கப்பட்டுள்ளனவோ அக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளைக் குறித்துரைத்து அக் கூட்டாட்சியாதன துணைநிலைச் சிறுகூறுகள் பற்றிய விவரணமொன்று :

(x) கூட்டாட்சியாதனத்தின் பொது அம்சங்களிலுள்ள ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறினதும் பிரிபடாப் பங்குப் பெறுமதி ;

(xi) ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கும் உள்ள பொது அம்சங்களிலுள்ள பிரிபடாப் பங்கின் நூற்றுவீதம் ;

(xii) கட்டிடமும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுள் ஒவ்வொன்றும் அதன் பயன்பாடு தொடர்பில் எந்நோக்கத்துக்குள்ளாகக் கருதப்பட்டுள்ளதென்பதுவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்பதுவும் பற்றிய கூற்றொன்று :

(xiii) கூட்டாட்சியாதன வரைபடத்திலுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளைக் குறித்தொதுக்குவதற்காக, உத்தேச கொள்வனைகாரர்களின் பெயர்களுடன், அவர்களிடமிருந்து ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் மீதான கணக்குக் கூற்றொன்று :

(xiv) இச்சட்டத்துக்கு இசைய, எடுத்துக்காட்டுதல் விரும்பத்தக்கதென விண்ணப்பகாரர் கருதக்கூடிய கூட்டாட்சி ஆதனந் தொடர்பிலான ஏதையேனும் மேலும் விவரங்கள்;

(XV) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படக் கூடிய வேறு ஏதேனும் தகவல் ;

(XVi) கூட்டாட்சியாதனச் சொந்தக்காரரின் அல்லது சொந்தக்காரர்களின் கையொப்பம்; அத்துடன்

(ஓ) விடயத்துக்கேற்றாற்போல, பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் விடயத்தில் முன்னைய பதிவுபற்றிய குறிப்பீட்டு இலக்கம்.

தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

3ஆ. (1) (அ) தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், முப்பிரதிகளில், செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய விண்ணப்பத்தின் "மூலப் பிரதி"யும் "இணைப் பிரதி"யும் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன்,

"மூன்றாவது பிரதி" கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொது முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ;

(ஆ) திட்டமிடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட, முப்பிரதிகளிலான, கட்டிட வரைபடம் ;

(இ) பிரிவு 5அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய விவரங்களைக் கொண்டுள்ள தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் ;

(ஈ) பின்வரும் நன்மைகளுக்கு உரித்துடையவரான ஆள், எவரேனும் இருப்பின், அவ்வாள் ஒவ்வொருவரினதும் எழுத்திலான சம்மதம் :—

(i) காணி மீதான தாக்கீடு ;

(ii) அக்காணி முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் குத்தகை;

(iii) அத்தகைய குத்தகைமீதான தாக்கீடு; அல்லது

(iv) காணிமீது அல்லது அத்தகைய ஏதேனும் குத்தகை மீது ஒரு சோந்தை;

(உ) காணித்துண்டுக்கான உரித்துச் சான்றிதழ் ;

ஆயின், எவ்வாறாயினும் காணித்துண்டுக்கான உரித்துச் சான்றிதழ் சொந்தக்காரரின் உடைமையில் இல்லாது, ஆனால் வேறோராளின் உடைமையில் இருக்கின்றவிடத்து, அத்தகைய வேண்டுகோளில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக உரித்துப்பதிவாளரிடம் அச்சான்றிதழைக் காண்பிக்குமாறு அத்தகைய சொந்தக்காரரினால் அத்தகைய வேறு ஆள்மீது சேர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளின் பிரதி அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் :

(ஊ) (i) உத்தேச கட்டிடத்துக்கு ஏற்பாடு செய்யப்படத் தேவைப்படுத்தப்பட்ட பொது வசதிகள் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனவும் :

(ii) உத்தேச கட்டிடத்தின் பொது அம்சங்கள், முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் அத்தகைய பொது அமிசங்களின் முறையான கட்டுப்படுத்துதலை, நிருவகித்தலை, பராமரித்தலை அல்லது முகாமை செய்தலை உறுதிப்படுத்தும் விதமாக முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளதெனவும்,

அத்தாட்சிப்படுத்தி கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ் :

(எ) (i) அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதும் கட்டிட நிர்மாணத்துக்கு வேண்டிய நிதி உதவி கிடைக்கக் கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிடுவதுமான

சான்றிதழ் மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட, அத்தகைய கட்டிட நிர்மாணத்துக்கான நிதிகள் கிடைக்கக்கூடியமை பற்றியும் ;

(ii) தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தை ஈடுவைப்பதன் மூலம் ஏற்கனவே பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள நிதிகள், தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கு அல்லது சிறுகூறுகளுக்கு எதிராகப் பிணைப்பொறுப்பாக்கப்பட்ட அல்லது பிணைப்பொறுப்பாக்கப்படவுள்ள பணத்தொகை, அங்கீகரிக்கப்பட்ட நிதிநிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட அத்தகைய நிதி நிறுவனங்களின் பெயர் என்பவற்றின் விவரங்கள் பற்றியும்,

விண்ணப்பகாரரினால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்று ;

(ஏ) பட்டயம்பெற்ற கணிய அளவீட்டாளரினால் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட, கட்டிட நிர்மாணச் செலவை உறுதிப்படுத்தும் நிதிசார் அறிக்கை ;

(ஐ) விடயத்துக்கேற்றாற்போல, பதிவுபெற்ற கட்டிடக் கலைஞரால் அல்லது பதிவு பெற்ற உயர் தொழில்சார் குடியியல் அல்லது கட்டிடவமைப்பியல் பொறியியலாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட, பின்வரும் செயற்பாடுகளுள் ஒவ்வொன்றும் தொடங்கும் உத்தேச தேதியையும் பூரணப்படுத்தப்படும் உத்தேச தேதியையும் காட்டும்:

மொத்த கட்டிட நிர்மாணத்தின் நடை முறைப்படுத்தல் திட்டம் ;

(i) அத்திவாரப் பத்திகள் ;

(ii) சுவர்களின் நிர்மாணம் ;

(iii) மாடிகளின் நிர்மாணம் ;

(iv) கூரைகளின் நிர்மாணம் ;

(v) மனித உறைவிடமாகப் பயன்படுத் தப்படும் மட்டம் வரையான இறுதி முடிப்பு வேலை ;

(ஓ) பிரிவு 3அ என்பதன் (2) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாட்டைக் கொண்டிருக்கின்ற, விண்ணப்பகாரரால் செய்யப்பட்டு பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப் பட்ட வெளிப்படுத்துகை.

பகுதி யளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

3இ. (1) (அ) பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப் பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத் தில், முப்பிரதிகளில், செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய விண்ணப்பத்தின் "மூலப் பிரதி"யும் "இணைப்பிரதி"யும் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் "மூன்றாவது பிரதி" பொது முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண் ணப்பம் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ;

(ஆ) திட்டமிடல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட, முப்பிரதிகளிலான, கட்டிட வரைபடம் ;

(இ) பிரிவு 5ஆ என்பதில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டுள்ள பகுதியளவிலான கூட்டாட்சி யாதன வரைபடம் ;

(ஈ) பின்வரும் நன்மைகளுக்கு உரித்துடைய வரான ஆள், எவரேனும் இருப்பின், அவ்வாள் ஒவ்வொருவரினதும் எழுத்தி லான சம்மதம் :—

(i) காணி மீதான தாக்கீடு ;

(ii) அக்காணி முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் குத்தகை;

(iii) அத்தகைய குத்தகைமீதான தாக்கீடு; அல்லது

(iv) காணிமீது அல்லது அத்தகைய ஏதேனும் குத்தகைமீது ஒரு சோந்தை;

(உ) காணித்துண்டுக்கான உரித்துச் சான்றிதழ் ;

ஆயின், எவ்வாறாயினும், காணித்துண் டுக்கான உரித்துச் சான்றிதழ் சொந்தக்கார ரின் உடைமையில் இல்லாது, ஆனால் வேறோராளின் உடைமையில் இருக்கின்ற விடத்து, அத்தகைய வேண்டுகோளில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள்ளாக உரித்துப்

பதிவாளரிடம் அச்சான்றிதழைக் காண்பிக்குமாறு அத்தகைய சொந்தக்காரரினால் அத்தகைய வேறு ஆள்மீது சேர்ப்பிக்கப் பட்ட வேண்டுகோளின் பிரதி அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) கட்டிடத்திலுள்ள கூட்டாட்சியாதனச் சிறு கூறுகளினது இருப்பாட்சியாளர்களின் நன்மைக்கும் நலனுக்குமென ஏற்பாடு செய்யப்பட்ட பொது வசதிகள் திருப்திகர மானவை எனவும் கூட்டாட்சி ஆதனத்தின் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, நிருவாகம், பராமரிப்பு அல்லது முகாமை தொடர்பில் செய்யப்பட்ட ஒழுங்குகள் திருப்திகரமானவை எனவும் அத்தாட்சிப் படுத்தி கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொது முகாமையாள ரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(எ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள, எந்த உள்ளூர் அதிகாரசபையின் எல்லைகளுக்குள்ளாகக் காணி அமைந்துள்ளதோ அந்த உள்ளூர் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட இசைவுச் சான்றிதழ் ;

(ஏ) அனுமதி வழங்கப்பட்ட தேதியையும் அதன் தொடர்பு எண்ணையும் அதன்கண் குறிப்பிட்டு, எவ்வரைபடங்களையும் விரைக்குறிப்புகளையும் குறிப்பீடுசெய்வ தன் மூலம் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கும் விவரக் குறிப்பு களுக்கும் இணங்க, பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப் பட்ட பூரணமாக்கப்பட்ட கூட்டாட்சியா தனச் சிறுகூறுகளும் தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனச் சிறுகூறுகளும்

வரையப்பட்டுள்ளன எனப் பயன்படும், பதிவுபெற்ற கட்டிடக் கலைஞரிடமிருந்து அல்லது பதிவுபெற்ற உயர்தொழில்சார் குடியியல் அல்லது கட்டிட அமைப்பியல் பொறியியலாளரிடமிருந்து பெறப்பட்ட, சான்றிதழ் ;

(ஐ) விடயத்துக்கேற்றாற்போல, பகுதியளிவிலான கூட்டாட்சி ஆதன வரைபடம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடம் விடயத்தில் பதிவு செய்யப்பட்ட குறிப்பீட்டு இலக்கம் ;

(ஒ) (i) பதிவுசெய்யப்பட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டாட்சி ஆதனத்தின்மீது ஈடொன்று இருக்கின்றவிடத்து —

(அ) கூட்டாட்சி ஆதனத்தை ஈடு வைப்பதன் மூலம் ஏற்கனவே பெறப்பட்ட நிதிகள் மற்றும் அத்தகைய நிதி நிறுவனத்தின் பெயர் ;

(ஆ) மேற்சொல்லப்பட்ட ஈட்டின்கீழ் கடனாகப் பெறப்பட்ட மொத்தப் பணத் தொகையும் பதிவுசெய்யப்பட உத்தேசிக்கப்பட்ட அத்தகைய கூட்டாட்சியாதன வரைபடம் ஒவ்வொன்றுக்கு எதிராகவும் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட பணத்தொகையும்,

என்பன தொடர்பிலான விவரங்களைக் கூறும் விண்ணப்பக்காரரினால் செய்யப்படும் வெளிப்படுத்துகை ஒன்று ;

(ii) பதிவுசெய்யப்பட்ட உத்தேசிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின்மீது அத்தகைய

ஈடெதுவும் இல்லாதவிடத்து, சொந்தக்காரர் அப்பயன்படும் கூற்றொன்றைச் செய்தல் வேண்டும் ;

(ஓ) பிரிவு 3அ என்பதன் (2) ஆம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளில் கொண்டிருக்கப்பட்ட, விண்ணப்பகாரரால் செய்யப்பட்டு பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"கூட்டாட்சியாதன வரைபடம்.

5. (1) கூட்டாட்சியாதன வரைபடமானது உரிமம் பெற்ற நில அளவையாளரொருவரால் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் தாயாரிக்கப்பட்டு வரையப்பட்டிருக்க வேண்டிய தான நில அளவை வரைபடமொன்றை அல்லது வரைபடங்களை கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் —

(அ) கூட்டாட்சியாதனத்தின் வெளிப்புற மேற்பரப்பு எல்லைகளையும், எல்லைக்குறிகளையும், மேற்பரப்பு எல்லைகளைத் தொடர்புபடுத்தி அதன்மீது நிறுவப்பட்டுள்ள, துணைப்பிரிவாக்கப்பட்ட ஒவ்வொரு கட்டித்தின் அமைவிடத்தையும் வரைந்து காட்டுதலும் வேண்டும் ;

(ஆ) காணித்துண்டு பதிவுசெய்யப்பட்டுள்ள தான பிரிவு, தொகுதி, இருமடித்தாள் பக்கம் என்பவற்றையும் அதன் அளப்பளவு செய்யப்பட்ட இடப்பரப்பையும் குறித்துரைத்தலும் வேண்டும் :

(இ) (i) ஒவ்வொரு மாடியினதும் தளங்களையும் உட்கூரைகளையும் : அத்துடன்

(ii) ஒவ்வொரு மாடியினதும் உயரத்தையும்,

காட்டுவதான துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றினதும் செங்குத்தான பிரிவு ஒன்றினையும் உள்ளடக்கியிருத்தலும் வேண்டும் ;

(ஈ) கட்டிட வரைபடங்களையும் துணைப் பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடங்களுக்கு இணங்க, பூரணமாக்கப்பட்ட, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடமொன்றாக கூட்டாட்சியாதனத்தினுள் கட்டப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றினதும் விவரணம் ஒன்றினையும், அது போன்ற செங்குத்தான பிரிவு மற்றும் பரிமாணம் என்பவற்றையும் உள்ளடக்கியிருத்தலும் வேண்டும் ;

(உ) உட்பிரிவுகள் (2) அத்துடன் (3) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தாங்குதளம் எதனையும் காட்டவேண்டிய அவசியமில்லாமல், கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டும் தளங்கள், சுவர்கள் என்பவற்றைக் குறிப்பீடு செய்து, ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறு கூறையும் வரைந்து காட்டுவதுடன் அதன் எல்லைகளை வரைவுசெய்தலும் வேண்டும் ;

(ஊ) கட்டிடம் ஒவ்வொன்றும் எக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோ அக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை அடையாளம் காட்டி, அத்தகைய சிறுகூறுகளை வரிமதிப்பீட்டிலக்கங்கள், இலக்கங்கள் அல்லது வேறு சின்னங்கள் மூலம் வேறுபடுத்திக் காட்டுதலும் வேண்டும் ;

(எ) கூட்டாட்சியாதனத்தின் காணித்துண்டு எண்ணைத் தொடர்புபடுத்தி ஒவ்வொரு மாடியையும் சுட்டெழுத்தொன்றினால் வேறுபடுத்திக் காட்டுதலும், ஒவ்வொரு மாடியினதும் எண்ணைத் தொடர்புபடுத்தி அந்த மாடியிலுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளைக் குறித்துரைத்தலும் வேண்டும் ;

(ஏ) ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறினதும் அண்ணளவான தள இடப்பரப்பைக் குறித்துரைத்தலும் வேண்டும் ;

(ஐ) கட்டிட வரைபடங்களையும் துணைப் பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடங்களுக்கிணங்க, பூரணமாக்கப்பட்ட, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடமொன்றாகக் கூட்டாட்சி ஆதனத்துக்குள் நிறுவப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றினதும் தாங்குதளம் எதனையும் காட்டவேண்டிய அவசியம் இல்லாமல், வெளிப்புற எல்லைகளை வரைந்து காட்டுதலும் கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டுதலும் வேண்டும் ;

(ஓ) கூட்டாட்சி ஆதனத்துக்கான பொது அம்சங்களை வரைவுசெய்தலும் வேண்டும் ;

(ஓ) கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிடமானது கூட்டாட்சி ஆதனத்தின் வெளிப்புறக் கிடைநிலை எல்லைகளுக்குள் அமைந்துள்ளதென்னும் பயன்பட, அதனைத் தயாரிப்பவரான ஆளினால் செய்யப்பட்ட, புறக்குறிப்பொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும் ;

(ஔ) அதன்கண் காட்டப்பட்டுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள், கூட்டாட்சியாதனத்திலுள்ள அதேபோன்றவை என்னும் பயன்பட பதிவுபெற்ற கட்டிடக் கலைஞரொருவரின் அல்லது பதிவுபெற்ற உயர்தொழில்சார் குடியியல் அல்லது கட்டிட அமைப்பியல் பொறியியலாளரொருவரின் சான்றிதழொன்று இணைக்கப்படுதலும் வேண்டும் ;

(க) பிரிவு 20அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதமாக வரைபடத்திலுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறு ஒவ்வொன்றினதும் பங்குப் பெறுமதியையும் பதிதலும் வேண்டும் ;

(ங) கூட்டாட்சி ஆதனத்தின் வெளிப்புற மேற்பரப்பு எல்லைகளைத் தொடர்புறுத்தி கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட எல்லாக் கட்டிடங்களும் எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளும் கூட்டாட்சி ஆதனத்தினுள் உள்ளன எனவும், அவை, கட்டிட வரைபடங்களையும் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு அப்போதைக்

குப் பொறுப்பாக இருப்பதான அதிகார சபையினால் வழங்கப்பட்ட அத்தகைய வரைபடங்களுக்கு இசைந்தொழுகுவனவாக உள்ளன எனவும் கூறுவதான உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒருவரின் சான்றிதழொன்று அதன்கண் புறக் குறிப்பிடப்பட்டிருத்தலும் வேண்டும் ;

(ச) முழுத் தானங்களில் ஒவ்வொரு கூட்டாட்சிச் சிறுகூறினதும் பங்குப் பெறுமதிகளையும், எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும் கூட்டுமொத்தப் பங்குப் பெறுமதி உரித்துகளுக்குச் சமமான ஒரு தானத்தையும் காட்டுதலும் வேண்டும் ;

(ஞ) பிரிவு 20ங என்னும் பிரிவுக்கு இணங்க ஆவணங்கள் முகாமைக் கூட்டுத்தாபனத்திற்குச் சேர்ப்பிக்கப்படக்கூடியதான முகவரி அதன்கண் புறக்குறிப்பிடப்பட்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ட) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு விவரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) துணைச் சிறுகூறொன்று கட்டிடம் ஒன்றைக் கொண்டிருப்பதாகவிருந்து, அத்துடன் வெளிப்புறச் சுவர்களையும், தளங்களையும் உட்கூரைகளையும் எல்லைகளாகக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய துணைச் சிறுகூறின் பரிமாணங்கள், எல்லைகள் என்பன, கூட்டாட்சியாதன வரைபடத்தில், (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுக்கிணங்க, காட்டப்படுதல் வேண்டும்.

(3) துணைச் சிறுகூறொன்று கட்டிடம் ஒன்றினைக் கொண்டிராதவிடத்து —

(அ) அத்துணைச் சிறுகூறின் வெளிப்புற எல்லைகள் கட்டிட வரைபடங்களையும் துணைப்பிரிவாக்கம் பற்றிய வரைபடங்களையும் அங்கீகரிப்பதற்கு அப் பேராதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடங்களிலிருந்து நிச்சயப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்துணைச் சிறுகூறு கூட்டாட்சி ஆதனத்தின் இன்னொரு பாகத்தினால் தரைமட்டத்துக்கு மேலே உள்ள ஏதேனும் நீட்சியின் அல்லது கீழே உள்ள ஊடுருவலின் அளவுக்குத் தவிர அதன் செங்குத்தான பரிமாணத்தைப் பொறுத்தவரை வரையறையற்றதாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கூட்டாட்சியாதன வரைபடமானது (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் காட்டப்பட்டவாறான அதே போன்ற பரிமாணங்களுடன் துணைச் சிறு கூறின் விளக்கப்படம் ஒன்றினைக் காட்டுதல் வேண்டும்.

(4) கூட்டாட்சியாதன வரைபடத்தில் வேறு விதமாகக் குறித்துக்காட்டப்பட்டிருந்தாலன்றி, இன்னொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுடன் அல்லது பொது அம்சங்களுடன் ஏதேனும் கூட்டாட்சிச் சிறுகூறுக்குள்ள பொதுவான எல்லையானது, விடயத்துக்கேற்றாற்போல, தளத்தின், சுவரின் அல்லது உட்கூரையின் மத்தியாக இருத்தல் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை நேரே உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 5அ மற்றும் 5ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5அ மற்றும் 5ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்.

"தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம்.

5அ. தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடமானது உரிமம்பெற்ற நில அளவையாளரொருவரால் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு வரையப்பட்டிருக்கவேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(அ) உத்தேச கூட்டாட்சியாதனத்தின் வெளிப்புற மேற்பரப்பு எல்லைகளையும் எல்லைக்குறிகளையும், மேற்பரப்பு எல்லைகளைத் தொடர்புபடுத்தி, அதன் மீது நிறுவப்பட உத்தேசிக்கப்படவுள்ள துணைப்பிரிவாக்கப்பட்ட ஒவ்வொரு கட்டிடத்தின் அமைவிடத்தையும் வரைந்து காட்டுதல் :

(ஆ) காணித்துண்டு பதிவுசெய்யப்பட்டுள்ள பிரிவு, தொகுதி, இருமடித்தாள் பக்கம் மற்றும் அதன் அளப்பனவு செய்யப்பட்ட இடப்பரப்பைக் குறித்துரைத்தல் :

(இ) (i) ஒவ்வொரு மாடியினதும் தளங்களையும் உட்கூரைகளையும் : அத்துடன்

(ii) ஒவ்வொரு மாடியினதும் உயரத்தையும்.

காட்டுவதான கட்டியமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றினதும் செங்குத்தான பிரிவு ஒன்றினை உள்ளடக்குதல் ;

(ஈ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடத்துக்கிணங்க காணித்துண்டுக்குள்ளாகக் கட்டியமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடம் ஒவ்வொன்றினதும் விவரணம் ஒன்றினையும் அதுபோன்ற செங்குத்தான பிரிவு மற்றும் பரிமாணங்கள் என்பவற்றை உள்ளடக்குதல் ;

(உ) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் அத்துடன் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, தாங்குதளம் எதனையும் காட்ட வேண்டிய அவசியமில்லாமல், கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டும் தளங்கள், சுவர்கள் என்பவற்றைக் குறிப்பீடு செய்து உத்தேசிக்கப்பட்ட ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறையும் வரைந்து காட்டுவதுடன் அதன் எல்லைகளை வரைவுசெய்தல் ;

(ஊ) உத்தேச கட்டிடம் ஒவ்வொன்றும் உத்தேசிக்கப்பட்ட எக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளாகப் பிரிக்கப்படவுள்ளதோ உத்தேசிக்கப்பட்ட அக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை அடையாளங்காட்டி, அத்தகைய சிறுகூறுகளை வரிமதிப்பீட்டிலக்கங்கள், இலக்கங்கள் அல்லது வேறு சின்னங்கள் மூலம் வேறுபடுத்திக் காட்டுதல் ;

(எ) நிலவுடைமை அளவீட்டுப் படத்தின் காணித்துண்டு இலக்கத்தைத் தொடர்புபடுத்தும் சுட்டெழுத்தொன்றினால்

உத்தேசிக்கப்பட்ட ஒவ்வொரு மாடியையும் வேறுபிரித்துக் காட்டி, அத்தகைய மாடி இலக்கத்தைத் தொடர்புபடுத்தி ஒவ்வொரு மாடியிலும் உள்ள உத்தேசிக் கப்பட்ட கூட்டாட்சிச் சிறுகூறுகளைக் குறித்துரைத்தல் ;

(ஏ) உத்தேச சிறுகூறு ஒவ்வொன்றினதும் அண்ணளவான தள இடப்பரப்பளவைக் குறித்துரைத்தல் ;

(ஐ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினால் அங்கீகரிக் கப்பட்ட அத்தகைய வரைபடத்துக் கிணங்க காணித்துண்டுக்குள்ளாக கட்டியமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடம் ஒவ்வொன்றினதும் தாங்குதளம் எதனையும் காட்டவேண்டிய அவசியமில்லாமல், வெளிப்புற எல்லைகளை வரைந்து காட்டுதலும் கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டுதலும் ;

(ஒ) தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் தற்போதைக்கான பொது அம்சங்களை வரைவு செய்தல் ;

(ஓ) முழுத்தானங்களில் உத்தேசிக்கப்பட்ட ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறினதும் தற்போதைக்கான பங்குப் பெறுமதிகளையும் உத்தேசிக்கப்பட்ட எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும் தற்போதைக்கான கூட்டுமொத்தப் பங்குப் பெறுமதி உரித்துகளுக்குச் சமமான ஒரு தானத்தையும் காட்டுதல் ;

(ஔ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடத்துக்கிணங்க, தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட, கட்டியமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடம் இருக்கின்றதெனப் பயன்படும், அத்தகைய

வரைபடத்தைத் தயாரிக்கின்ற ஆளினால் செய்யப்பட்ட புறக்குறிப்பொன்றைத் தாங்கியிருத்தல்.

பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம்.

5ஆ. பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரை படம் உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒருவரால் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு வரையப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும் : –

(அ) பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் வெளிப்புற மேற்பரப்பு எல்லைகளையும் எல்லைக்குறிகளையும், மேற்பரப்பு எல்லைகளைத் தொடர்புபடுத்தி அதன் மீது கட்டப்பட்டுள்ள பகுதியளவில் பூரணமாக்கப்பட்ட துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றினதும் அமைவிடத்தையும், மேற்பரப்பு எல்லைகளைத் தொடர்புபடுத்தி, அப்போதைக்கு அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்துக்கிணங்க இனிமேல் கட்டிமுடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் எஞ்சிய பாகத்தின் அமைவிடத்தையும் வரைந்து காட்டுதல் ;

(ஆ) காணித்துண்டு பதிவுசெய்யப்பட்டுள்ள பிரிவு, தொகுதி, இருமடித்தாள் பக்கம் மற்றும் அதன் அளப்பளவு செய்யப்பட்ட இடப்பரப்பைக் குறித்துரைத்தல் ;

(இ) (i) ஒவ்வொரு மாடியினதும் தளங்களையும் உட்கூரைகளையும் : அத்துடன்

(ii) ஒவ்வொரு மாடியினதும் உயரத்தையும்,

காட்டுவதான, பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றினதும் செங்குத்தான பிரிவொன்றை உள்ளடக்குதல் ;

(ஈ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடத்துக்கிணங்க, காணித் துண்டுக்குள்ளாகக் கட்டப்பட்ட, பகுதியள வில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தின் செங்குத்தான பிரிவு மற்றும் பரிமாணங் கள், மற்றும் இனிமேல் கட்டிமுடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் மீதிப்பாகத்தின் செங்குத்தான பிரிவு மற்றும் பரிமாணங் கள் என்பவற்றின் தனித்தனியான விவரணத்தை உள்ளடக்குதல் ;

(உ) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் அத்துடன் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைவாக, தாங்குதளம் எதனையும் காட்டவேண்டிய அவசியமில்லாமல், கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டும் தளங்கள் மற்றும் சுவர்கள் என்பவற்றைக் குறிப்பீடுசெய்து, பகுதியளவில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தின் கூட்டாட்சி யாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்றையும் வரைந்துகாட்டுவதுடன் அதன் எல்லை களை வரைவு செய்தல் ;

(ஊ) ஒவ்வொரு கட்டிடமும், பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தின் எக்கூட் டாட்சியாதனச் சிறுகூறுகளால் பிரிக்கப் படவுள்ளனவோ அக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை அடையாளங்காட்டி, அத்த கைய சிறுகூறுகளை வரிமதிப்பீட்டி லக்கங்கள், இலக்கங்கள் அல்லது வேறுசின்னங்கள் மூலம் வேறுபடுத்திக் காட்டுதல் ;

(எ) நிலவுடைமை அளவீட்டுப் படத்தின் காணித்துண்டு இலக்கத்தைத் தொடர்பு

படுத்தி சுட்டெழுத்தொன்றினால் ஒவ்வொரு மாடியையும் வேறுபிரித்துக் காட்டி, அத்தகைய மாடி இலக்கத்தைத் தொடர்புபடுத்தி ஒவ்வொரு மாடியிலும் பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தின் கூட்டாட்சிச் சிறுகூறுகளைக் குறித்துரைத்தல் ;

(ஏ) ஒவ்வொரு சிறுகூறினதும் அண்ணளவான தள இடப்பரப்பைக் குறித்துரைத்தல் ;

(ஐ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாக இருப்பதான அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய படத்திற்கிணங்க காணித்துண்டுக்குள்ளாகக் கட்டியமைக்கப்பட்ட பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றினதும் தாங்குதளம் எதனையும் காட்டவேண்டிய அவசியமில்லாமல், வெளிப்புற எல்லைகளை வரைந்து காட்டுதலும் கிடைநிலைப் பரிமாணங்களைக் காட்டுதலும் ;

(ஒ) பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பொது அம்சங்களை வரைவுசெய்தல் ;

(ஓ) முழுத் தானங்களில், பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தின் ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறினதும் இனிமேல் கட்டிமுடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் எஞ்சிய பாகத்தின் தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறு ஒவ்வொன்றினதும் பங்குப் பெறுமதிகளையும் அத்தகைய எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும் அத்தகைய தற்போதைக்கான எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும்

கூட்டுமொத்தப் பங்குப் பெறுமதி உரித்துக்குச் சமமான ஒரு தானத்தையும் காட்டுதல் ;

(ஔ) கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்கு அப்போதைக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வரைபடத்துக்கிணங்க, பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தில் காட்டப்பட்ட, கட்டப்பட்ட பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடம் இருக்கின்றதெனப் பயன்படும், அத்தகைய வரைபடத்தைத் தயாரிக்கின்ற ஆளினால் செய்யப்பட்ட புறக்குறிப்பொன்றைத் தாங்கியிருத்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

"கூட்டாட்சியாதன வரைபடங்கள், மீளப்பிரித்தல் அல்லது ஒன்று சேர்த்தல் வரைபடங்கள் என்பவற்றைப் பதிவு செய்தலும் மறுப்புகளுக் கெதிரான மேன்முறை யீடுகளும்.

6. (1) கூட்டாட்சியாதன வரைபடமொன்றை அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடமொன்றை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடமொன்றை பதிவு செய்வதற்கான ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது திருத்த வரைபடமொன்றைப் பதிவுசெய்வதற்காக 8 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது திருத்த வரைபடமொன்றைப் பதிவுசெய்வதற்காக 8ஆ என்னும் பிரிவின் கீழ் ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது மீளப் பிரித்தல் வரைபடமொன்றை அல்லது ஒன்று சேர்த்தல் வரைபடமொன்றைப் பதிவுசெய்வதற்காக 12 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் விண்ணப்பத்தை அல்லது சேர்ப்புக்கள் வரைபடமொன்றைப் பதிவுசெய்வதற்காக 8அ என்னும் பிரிவின் கீழ் ஏதேனும் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதன்மேல், பதிவாளர், அத்தகைய விண்ணப்பத்தை விடயத்திற்கேற்றாற்போல, கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது தற்

போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது திருத்த வரைபடம் அல்லது மீளப்பிரித்தல் வரைபடம், அல்லது ஒன்று சேர்த்தல் வரைபடம் அல்லது சேர்த்தல் வரைபடம் என்பவற்றுடனும் நிலவுடைமை அளவீட்டுப் படத்துடனும் சேர்த்து அத்தாட்சிப் படுத்துவதற்காக நில அளவைக் கண்காணிப் பாளருக்கு அத்தகைய விண்ணப்பத்தை ஆற்றுப் படுத்துதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்றாற்போல, கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது திருத்த வரைபடம் அல்லது மீளப்பிரித்தல் வரைபடம் அல்லது ஒன்றுசேர்த்தல் வரைபடம் அல்லது சேர்த்தல் வரைபடம், 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்துக்கும் இசைந்தொழுகுவதாக நில அளவைக் கண்காணிப்பாளர் திருப்திப்படுகின்ற விடத்து, நில அளவையாளர் தலைமையதிபதியின் சார்பில் அத்தகைய வரைபடத்தை அவர் அத்தாட்சிப் படுத்துதல் வேண்டும் என்பதுடன் —

(அ) பொருத்தமான குறிப்பீடுகளைச் செய்ததன் பின்னரும், உரித்தைப் பதிவுசெய்வதற்காகப் பயன்படுத்தப்படும் நிலவுடமை அளவீட்டுப் படத்தில் அவசியமான திருத்தங்களை அல்லது மாற்றங்களை அல்லது உபபிரிவாக்கங்களை அல்லது ஒன்று சேர்த்தல்களை அல்லது கூட்டிணைப்புக்களைச் செய்த பின்னரும், விடயத்துக்கேற்றாற்போல, கூட்டாட்சி

யாதன வரைபடத்தின் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது திருத்த வரைபடத்தின் அல்லது மீளப்பிரித்தல் வரைபடத்தின் அல்லது ஒன்று சேர்த்தல் வரைபடத்தின் அல்லது சேர்த்தல்கள் வரைபடத்தின் மூலப் பிரதியைக் கோப்பிடுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்றாற்போல, அவசியமான குறிப்பீடுகளை அல்லது திருத்தங்களை அல்லது துணைப்பிரிவாக்கல்களை அல்லது ஒன்று சேர்த்தல்களைச் செய்தபின்னர் நிலவுடைமை அளவீட்டுப் படத்துடன் சேர்த்து, அத்தகைய வரைபடத்தின் இணைப்பிரதியையும் விண்ணப்பத்தையும் தேர்தான பதிவாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(3) முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிலவுடைமை அளவீட்டுப் படத்தை நிலஅளவைக் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொண்டதன் மேல், அத்தகைய விண்ணப்பம் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்துக்கும் இசைந்தொழுகுவதாகப் பதிவாளர் திருப்திப்பட்டால், அத்துடன்

(அ) விண்ணப்பமானது கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கானதாக இருக்கின்றவிடத்து —

(i) கூட்டாட்சியாதன வரைபடத்தின் இணைப்பிரதியை கூட்டாட்சியாதனச் சிறுகூறின் கோவையில் கோப்பிடுதல் வேண்டும் ;

(ii) கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பாகவும் புதிய உரித்துக்கோவை இடாப்பொன்றைத் திறந்து, அத்தகைய இடாப்பிலும், காணித்துண்டானது எந்த இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த இடாப்பிலும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் காணப்படுமாயின் தற்போதைக்கான அக்கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான அக்கூட்டாட்சியாதன வரைபடம் பதிவு செய்யப்பட்டுள்ள இடாப்பிலும் பொருத்தமான மாட்டறைதல்களைச் செய்தல் வேண்டும் ;

(iii) காணித்துண்டு சம்பந்தப்பட்ட இடாப்பிலுள்ள ஆதனப்பிரிவில், அதன்கண் அடங்கியுள்ள காணி பொது ஆதனத்தை மாத்திரம் கொண்டுள்ளது எனப் பதிதல் வேண்டும் ;

(iv) கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்று தொடர்பாகவும், இடாப்பிலுள்ள பாரபந்தங்கள் பிரிவில், ஈடுகள் இருக்கின்றமை பற்றியும் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறு ஒவ்வொன்றுக்கெதிராகவும் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட

தொகை பற்றியும், கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பாதிக்கும் குத்தகைகள், விற்பனை உடன்படிக்கைகள், முடிவுறா வழக்குகள், கைப்பற்றுதற்கட்டளை அல்லது தீர்வை முதலியன, எவையேனும் இருப்பின், அவை போன்ற பாரபந்தங்கள் ஒவ்வொன்றும் பற்றிய விவரங்களையும் பதிதல் வேண்டும் ;

(v) (இதனகத்துப்பின்னர் "பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய கூட்டாட்சியாதன வரைபடம் பதிவு செய்யப்பட்டுள்ளதென விண்ணப்பகாரருக்குத் தெரிவித்து கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபைக்கான அறிவித்தலுடன், இயைபான இடாப்புக்களின் குறிப்பீட்டு எண்கள் பற்றி அவருக்கு அறிவித்தல் வேண்டும்:

(vi) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், அத் தனியான கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பில் கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பமானது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவு செய்வதற்கானதாக இருக்கின்றவிடத்து—

(i) தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் இணைப் பிரதியை தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறின் கோவையில் கோப்பிடுதல் வேண்டும் :

(ii) தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட தற்போதைக்கான ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பாகவும் புதிய தற்போதைக்கான உரித்துக்கோவை இடாப்பொன்றைத் திறந்து, அத்தகைய இடாப்பிலும் காணித்துண்டானது எந்த இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த இடாப்பிலும் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் எதுவும் இருக்குமாயின், தற்போதைக்கான அக்கூட்டாட்சி ஆதன வரைபடம் பதிவு செய்யப்பட்டுள்ள இடாப்பிலும் பொருத்தமான மாட்டறைதல்களைச் செய்தல் வேண்டும் :

(iii) காணித்துண்டு சம்பந்தப்பட்ட இடாப்பிலுள்ள ஆதனப் பிரிவில், அதன்கண் அடங்கியுள்ள காணி தற்போதைக்கான பொது ஆதனத்தை மாத்திரம் கொண்டுள்ளது எனப் பதிதல் வேண்டும் :

(iv) தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி

யாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்று தொடர்பாகவும் இடாப்பிலுள்ள பாரபந்தங்கள் பிரிவில், ஈடுகள் இருக்கின்றமை பற்றியும் அத்தகைய தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்றுக்கெதிராகவும் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட தொகை பற்றியும் தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பாதிக்கும் குத்தகைகள், விற்பனை உடன்படிக்கைகள், முடிவுறா வழக்குகள், கைப்பற்றுதற் கட்டளை அல்லது தீர்வை முதலியன எவையேனும் இருப்பின், அவை போன்ற பாரபந்தங்கள் ஒவ்வொன்றும் பற்றிய விவரங்களையும் பதிதல் வேண்டும் :

(v) (இதனகத்துப்பின்னர் "பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்தகைய தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவு செய்யப்பட்டுள்ளதென விண்ணப்பகாரருக்குத் தெரிவித்து, கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபைக்கான அறிவித்தலுடன், இயைபான இடாப்புகளிற் குறிப்பீட்டு எண்கள் பற்றி அவருக்கு அறிவித்தல் வேண்டும் :

(vi) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், அத்தனியான தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறு

தொடர்பில் தற்போதைக்கான கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழை வழங்குதல் வேண்டும் ;

(இ) விண்ணப்பமானது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தைப் பதிவு செய்வதற்கானதாக இருக்கின்றவிடத்து —

(i) பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் இணைப்பிரதியை பகுதியளவிலான கூட்டாட்சியாதனச் சிறுகூறின் கோவையில் கோப்பிடப்படுதல் வேண்டும் ;

(ii) பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பாகவும் புதிய உரித்துக்கோவை இடாப்பொன்றைத் திறந்து, அத்தகைய இடாப்பிலும் காணித்துண்டானது எந்த இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் எதுவும் இருக்குமாயின், பகுதியளவிலான அக்கூட்டாட்சி வரைபடம் பதிவுசெய்யப்பட்டுள்ள இடாப்பிலும் பொருத்தமான மாட்டறைதல்களைச் செய்தல் வேண்டும் ;

(iii) காணித்துண்டு சம்பந்தப்பட்ட இடாப்பிலுள்ள ஆதனப் பிரிவில், அதன்கண் அடங்கியுள்ள காணி பொது ஆதனத்தை மாத்திரம் கொண்டுள்ளது எனப் பதிதல் வேண்டும் ;

(iv) பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்று தொடர்பாகவும் இடாப்பிலுள்ள பாரபந்தங்கள் பிரிவில், ஈடுகள் இருக்கின்றமை பற்றியும் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்றுக்கெதிராகவும் பிணைப்பொறுப்பாக்கப்பட்ட தொகை பற்றியும், கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பாதிக்கும் குத்தகைகள், விற்பனை உடன்படிக்கைகள், முடிவுறா வழக்குகள், கைப்பற்றுதற் கட்டளை அல்லது தீர்வை முதலியன, எவையேனும் இருப்பின், அவை போன்ற பாரபந்தங்கள் ஒவ்வொன்றும் பற்றிய விவரங்களையும் பதிதல் வேண்டும்

(v) (இதனகத்துப்பின்னர் "பதிவு செய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவு செய்யப்பட்டுள்ளதென விண்ணப்பகாரருக்குத் தெரிவித்து, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்கான அறிவித்தலுடன், இயைபான இடாப்புக்களிற் குறிப்பீட்டு எண்கள் பற்றி அவருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(vi) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன் மேல், அத்தனியான கூட்டாட்சி

யாதனச் சிறுகூறு தொடர்பில் கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழை வழங்குதல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பமானது பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் ஏதேனும் திருத்த வரைபடத்தை அல்லது பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் ஏதேனும் மீளப்பிரித்தல் வரைபடத்தை அல்லது ஏதேனும் ஒன்றுசேர்த்தல் வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கானதாக இருக்கின்றவிடத்து —

(i) திருத்த வரைபடத்தின் அல்லது மீளப்பிரித்தல் வரைபடத்தின் அல்லது ஒன்றுசேர்த்தல் வரைபடத்தின் இணைப்பிரதியை இயைபான கூட்டாட்சியாதனச் சிறுகூறின் கோவையில் கோப்பிடுதல் வேண்டும் ;

(ii) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் தொடர்பாகவும் கூட்டாட்சியாதன உரித்து இடாப்பில் அவசியமான குறிப்பீடுகளைச்செய்து, பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன மூலவரைபடத்தில் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவி

லான கூட்டாட்சியாதன மூலவரை படத்தில் அவசியமான மாட்டறை தல்களைச் செய்தல் வேண்டும் ;

(iii) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி யாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவி லான கூட்டாட்சியாதன வரைபடத் தின் அத்தகைய திருத்தம் அல்லது மீளப்பிரித்தல் அல்லது ஒன்று சேர்த்தல் பதிவுசெய்யப்பட்டுள்ள தென விண்ணப்பகாரருக்குத் தெரிவித்து, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்கான அறிவித்தலுடன், இயைபான இடாப்புக்களின் குறிப்பீட்டு எண்கள் பற்றி அவருக்கு அறிவித் தல் வேண்டும் ;

(iv) விதித்துரைக்கப்பட்ட கட்டணத் தைப் பெற்றுக்கொண்டதன் மேல், அத்தனியான கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் தொடர்பில் புதிய கூட்டாட்சியாதன உரித்துச் சான்றி தழை வழங்குதல் வேண்டும் ;

(உ) விண்ணப்பமானது பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் ஏதேனும் திருத்த வரை படத்தைப் பதிவுசெய்வதற்கானதாக இருக்கின்றவிடத்து—

(i) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக் கான கூட்டாட்சியாதன வரைபடத் தின் திருத்த வரைபட இணைப் பிரதியை இயைபான தற்போதைக்

கான கூட்டாட்சியாதனச் சிறு கூறின் கோவையில் கோப்பிடுதல் வேண்டும்.

(ii) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக் கான கூட்டாட்சியாதன வரை படத்தில் காட்டப்பட்ட தற்போ தைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறு ஒவ்வொன்று தொடர் பாகவும் தற்போதைக்கான கூட் டாட்சியாதன உரித்து இடாப்பில் அவசியமான குறிப்பீடுகளைச் செய்து, பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி யாதன மூல வரைபடத்தில் அவசியமான மாட்டறைதல்களைச் செய்தல் வேண்டும் :

(iii) திருத்தப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறு ஒவ்வொன்று தொடர்பாகவும் இடாப்பிலுள்ள பாரபந்தங்கள் பிரிவில், ஈடுகள் இருக்கின்றமை பற்றியும் அத்தகைய கூட்டாட் சியாதனச் சிறுகூறு ஒவ்வொன் றுக்கு எதிராகவும் பிணைப் பொறுப்பாக்கப்பட்ட தொகை பற்றியும், கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பாதிக்கும் குத்தகை கள், விற்பனை உடன்படிக்கை கள், முடிவுறா வழக்குகள், கைப்பற்றுதற் கட்டளை அல்லது தீர்வை முதலியன, எவையேனும் இருப்பின், அவைபோன்ற பார பந்தங்கள் ஒவ்வொன்றும் பற்றிய விபரங்களையும் பதிதல் வேண் டும் :

(iv) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் அத்தகைய திருத்தம் பதிவுசெய்யப்பட்டுள்ளதென விண்ணப்பகாரருக்குத் தெரிவித்து, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்கான அறிவித்தலுடன், இயைபான இடாப்பின் குறிப்பீட்டு எண்கள் பற்றி அவருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(v) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், அத் தனியான கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பில் புதிய கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பமானது, பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் ஏதேனும் சேர்த்தல்கள் வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கானதாக இருக்கின்றவிடத்து —

(i) பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் சேர்த்தல்கள் வரைபட இணைப்பிரதியை இயைபான கூட்டாட்சியாதன சிறுகூறினது கோவையில் கோப்பிடுதல் வேண்டும் ;

(ii) பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் சேர்த்தல்கள் வரைபடத்தின் பின்னர் காட்டப்பட்ட, சேர்க்கப்பட்ட கூட்டாட்சியாதனச்

சிறுகூறுகள் ஒவ்வொன்று தொடர்பாகவும் கூட்டாட்சியாதன உரித்து இடாப்பில் அவசியமான குறிப்பீடுகளைச் செய்து, காணித்துண்டானது எந்த இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த இடாப்பிலும் அத்துடன் பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன் வரைபடம் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த இடாப்பிலும் அவசியமான மாட்டறைதல்களைச் செய்தல் வேண்டும் :

(iii) பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் சேர்த்தல்கள் வரைபடத்தில் பின்னர் காட்டப்பட்ட, சேர்க்கப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்று தொடர்பாகவும் இடாப்பிலுள்ள பாரபந்தங்கள் பிரிவில், ஈடுகள் இருக்கின்றமைபற்றியும் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் ஒவ்வொன்றுக்கெதிராகவும் பிணைப்பொறுப்பாக்கப்பட்ட தொகை பற்றியும் அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பாதிக்கும் குத்தகைகள், விற்பனை உடன்படிக்கைகள், முடிவுறா வழக்குகள், கைப்பற்றுதற் கட்டளை அல்லது தீர்வை முதலியன, எவைபேனும் இருப்பின், அவை போன்ற பாரபந்தங்கள் ஒவ்வொன்றும் பற்றிய விபரங்களையும் பதிதல் வேண்டும் ;

(iv) அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளனவென, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்கான பிரதியுடன், விண்ணப்பகாரருக்குத் தெரிவித்தல் வேண்டும் ;

(v) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பாக, கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப்பதிவுச் சட்டத்தின் 34, 35 மற்றும் 37 ஆகிய பிரிவுகள், உரித்து இடாப்பையும் நிலவுடைமை அளவீட்டுப் படத்தையும் பார்வையிடுவதற்கும், ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் நிலவுடைமை அளவீட்டுப் படங்களின் பிரித்தெடுத்த பகுதிகளையும் வழங்குவதற்கும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் அல்லது சிறுகூறுகளின் சொத்தாண்மை அல்லது அக்கறைச் சான்றிதழைப் பெறுவதற்கும், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பதிவாளர், கூட்டாட்சியாதன வரைபடத்தை, தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தை, அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது திருத்த வரைபடத்தை அல்லது மீளப்பிரித்தல் வரைபடத்தை அல்லது ஒன்றுசேர்த்தல் வரைபடத்தை அல்லது சேர்ப்புக்கள் வரைபடத்தை பதிவு

செய்வதற்கு மறுக்கின்றவிடத்து, அவர் மறுத்தற் கட்டளையொன்றை ஆக்கி, விதித்துரைக்கப்பட்ட இடாப்பில் அத்தகைய கட்டளைக்கான காரணங் களைப் பதிந்து அவ்வாறு பதிவுசெய்வதற்காக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த ஆளினால் செய்யப் பட்ட விண்ணப்பத்தின் மீதும் வழங்கப்பட்ட சாதனங்களின் மீதும் விடயத்துக்கேற்றாற்போல, "கூட்டாட்சியாதன உரித்துப் பதிவு மறுக்கப்பட் டுள்ளது" அல்லது "தற்போதைக்கான கூட்டாட்சி யாதன உரித்துப் பதிவு மறுக்கப்பட்டுள்ளது" அல்லது "தற்போதைக்கான கூட்டாட்சியாதன உரித்துப் பதிவு மறுக்கப்பட்டுள்ளது" அல்லது "பகுதியளவிலான கூட்டாட்சியாதன உரித்துப் பதிவு மறுக்கப்பட்டுள்ளது" என்னும் சொற்க ளைப் புறக்குறிப்பிடுதல் வேண்டும் ; அத்துடன் கொடுப்பனவு இன்றி அல்லது அவசியமற்ற தாமதமின்றி அவ்வாறு பதியப்பட்ட காரணங் களின் பிரதியொன்றை அவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(6) கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது திருத்த வரைபடத்தை அல்லது மீளப்பிரித்தல் வரைபடத்தை அல்லது ஒன்று சேர்த்தல் வரைபடத்தை அல்லது சேர்த்தல்கள் வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கு மறுத்து பதிவாளரினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றுக்கெதிராகவும் மேன்முறை யீடொன்று அமைதல் வேண்டும் என்பதுடன் ஆவணப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன், அத்தகைய மேன்முறையீடு தொடர்பில் ஏற்புடை யனவாதலும் வேண்டும்."

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"சாதனங்களைத் திருத்துதலும் அழித்தலும்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவு பதிவாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கூட்டாட்சியாதனச் சிறு கூறுகள் கோவையில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் கோவையில் கோப்பிடப்பட்ட எல்லாச் சாதனங்களையும் வைத்திருத்தல் அத்துடன் அழித்தல் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கூட்டாட்சி ஆதனத்தை தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தைப் பதிவுசெய்தல்.

7அ. (1) விடயத்துக்கேற்றாற்போல, கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவுசெய்யப்படுவதற்கென முன்வைக்கப்பட்ட கூட்டாட்சியாதனத்தின் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரரின் விண்ணப்பம் பதிவாளரினால் ஒப்பமிடப்பட்டு இலச்சினையிடப்பட்டு இயைபான உரித்து இடாப்புகள் எல்லாவற்றிலும் மாட்டறைதல்கள் முறையாகச் செய்யப்பட்டிருக்கும்போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்றாற்போல, கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவு செய்யப்படுவதன்மீது, கூட்டாட்சியாதனத்தின் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர், ஏதேனும் தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் ஏதேனும் தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர், இயைபான இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட அல்லது குறிக்கப்பட்ட பாரபந்தங்கள் எவையேனும் இருப்பின், அவற்றுக்கு அமைவாக, அவரது சிறுகூறுக்கும், பொது அமிசங்களில் அல்லது தற்போதைக்கான பொது அமிசங்களில் அவருக்குள்ள பகுதிக்கும் சொந்தக்காரராகக் கருதப்படுதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*"கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தைத் திருத்துதல்.*

8. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதனத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர், பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் திருத்த வரைபடத்தைப் பதிவுசெய்வதற்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) அத்தகைய வரைபடத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் இருந்துவரும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குச் செய்யப்பட்ட இயைபான மாற்றங்களைக் காட்டும் முப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமம் பெற்ற நில அளவையாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்டு வரையப்பட்ட (இதனகத்துப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவு செய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் "திருத்த வரைபடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நில அளவை வரைபடமொன்று;

(ஆ) நில அளவை வரைபடத்தில் காட்டப்பட்ட மாற்றல்கள் காணியில் இருக்கும் அமைவிடத்துக்கு இசைந்தொழுகுகின்றதெனப் பயன்படும் பதிவுபெற்ற கட்டிடக் கலைஞரிடமிருந்து அல்லது பதிவுபெற்ற குடியியல் அல்லது கட்டமைப்பியல் பொறியியலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(இ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கும் செய்யப்படும் மாற்றங்கள், கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பொது அமிசங்களின் கட்டுப்பாடு, நிருவாகம், பராமரிப்பு அத்துடன் முகாமைத் தேவைப்பாடுகள் மீது ஏதேனும் பாதகமான தாக்கத்தை

விளைவிக்கமாட்டாவென அத்தாட்சிப் படுத்தும் பொது முகாமையாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத் துக்கும் செய்யப்படவுள்ள அத்தகைய மாற்றங்களுக்கான இயைபான அதிகார சபையின் அங்கீகாரம் ;

(உ) அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறு கூறுக் கும் செய்யப்படவுள்ள அத்தகைய மாற்றத் துக்காக இயைபான ஈடுபெற்றவர், எவரேனும் இருப்பின், அவரின் சம்ம தம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ மற்றும் 8ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**12.** பின்வரும் புதிய பிரிவுகள் 8 ஆம் பிரிவை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 8அ மற்றும் 8ஆ என் னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும் : —

"பதிவு செய்யப்பட்ட பகுதியளவி லான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட பகுதியளவில் கட்டி முடிக்கப் பட்ட கட்டிடத்துக்கு பின்னர் சேர்க்கப்பட்ட கூட்டாட்சி யாதனச் சிறு கூறுகளையும் பதிவுசெய்தல்.

8அ. (1) ஏதேனும் பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரர், பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட, பகுதியளவில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்துடன் பின்னர் சேர்க்கப்பட்ட கூட்டாட்சி யாதனச் சிறுகூறுகளுள் எதனையும் பதிவுசெய்து கொள்ளுவதற்காகப் பதிவாளருக்கு விண்ணப்பிக் கலாம்.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று விதித்துரைக்கப்பட்ட படி வத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பின் வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும் : —

(அ) விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ;

(ஆ) உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒருவரால் அல்லது நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு வரையப்பட்டதும் ;

(i) பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்துக்குப் பின்னர் சேர்க்கப்பட்ட இயைபான கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளைக் காட்டவேண்டியதும் ;

(ii) அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளைச் சார்ந்த பொது அமிசங்களில் ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குமுள்ள தனித்தனிப் பங்கின் நூற்றுவீதத்தையும் பிரிபடாப்பங்கும் பெறுமதியையும் காட்ட வேண்டியதும் ;

(iii) நிலவுடமை அளவீட்டு வரைபடத்தின் தொடர்பு இலக்கத்தையும் பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறினதும் கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழின் முன்னைய பதிவு இலக்கத்தையும் கொடுக்க வேண்டியதும்.

ஆன முப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய (இதனகத்துப் பின்னர் பதிவு செய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சி யாதன வரைபடத்தின் "சேர்த்தல்கள் வரைபடம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) அளப்பனவு வரைபடம் ;

(இ) சேர்த்தல்கள் வரைபடத்தில் காட்டப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் காணியில் இருந்து அசைவிடத்துக்கு இசைந்தொழு குகின்றதெனப் பயன்படும் பதிவுபெற்ற கட்டிடக் கலைஞரிடமிருந்து அல்லது பதிவுபெற்ற குடியியல் அல்லது கட்டமைப்பியல் பொறியியலாளரிட மிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(ஈ) சேர்த்தல்கள் வரைபடத்தில் காட்டப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் மனித உறைவிடத்துக்கும் பொருத்தமானதென வும் அத்தகைய சிறு கூறுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொது வசதிகளின் சேவைகள் திருப்திகரமானவை எனவும் அத்தாட்சிப்படுத்திய கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் பொது முகாமையாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்;

(உ) பிரிவு 3அ என்பதன் (2) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியில் குறித்துரைக் கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைவாக, பகுதி யளவிலான கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழ் ;

(ஊ) பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் சேர்த் தல்கள் வரைபடத்தில் காட்டப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் ஒழுங்கு விதிகளுக்கு இசைந்தொழுகுவனவாக வுள்ளன எனப் பயன்பட கட்டிட வரை

படத்தை அங்கீகரிப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட இசைவுச் சான்றிதழ் ;

(எ) பிரிவு 3அ என்பதன் (2) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின்படியான விண்ணப்பகாரரின் வெளிப்படுத்துகையொன்று ;

(ஏ) விண்ணப்பகாரரினால் செய்யப்பட்டு பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்று, அது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் : —

(i) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் முழுப்பெயரும், முகவரியும், கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழ்கள் தொடர்பான குறிப்பீட்டு இலக்கமும் :

(ii) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரை படத்தின் சேர்தல்கள் வரைபடத்தில் காட்டப்பட்ட அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளைச் சார்ந்த பொது அமிசங்களில் ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறினதும் பிரிபடாப் பங்குப் பெறுமதிக்கும் அத்தகைய பெறுமதியின் நூற்று வீதத்துக்கும் செய்யப்பட்ட மாற்றங்கள் ;

(iii) பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் முன்னைய பகுதியின் மீதான குறிப்பீட்டு இலக்கம் ;

(iv) பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் சேர்த்தல்கள் வரைபடத்தில் காட்டப்பட்ட அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை ஒதுக்குவதற்காக, அவர்களில் பெயர்களைக் குறிப்பிட்டு, உத்தேசக் . கொள்வனைகாரர்களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட முற்பணங்கள் மீதான கணக்குக் கூற்றொன்று ;

(V) பகுதியளவிலான கூட்டாட்சியானச் சொந்தக்காரரின் அல்லது சொந்தக்காரர்களின் கையொப்பம்.

தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்துக்கான திருத்தம்.

8ஆ. ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரர், தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி வரைபடத்தின் திருத்த வரைபடத்தைப் பதிவு செய்வதற்காக எழுத்தில் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம். விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய பதிவுக்கான சொந்தக்காரரின் விண்ணப்பம் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் : —

(அ) பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குச் செய்யப்பட்ட இயைபான மாற்

றங்களைக் காட்டும் முப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய, உரிமம் பெற்ற நில அளவையாளரினால் தயாரிக் கப்பட்டு வரையப்பட்ட (இதனகத்துப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட தற்போதைக் கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் திருத்த வரைபடம் எனக் குறிப்பீடு செய் யப்படும்) நில அளவை வரைபடம் ;

(ஆ) பட்டயம் பெற்ற கணிய அளவீட் டாளரினால் மெய்யென்றுறுதிப்படுத் தப்பட்ட, பதிவுசெய்யப்பட்ட தற்போதைக் கான கூட்டாட்சியாதன வரைபடத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் காரணமாக ஏற்படும் கட்டிட நிர்மாணச் செலவை உறுதிப்படுத்தும் நிதிசார்ந்த அறிக்கை யுடன்,

(i) அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத் திடமிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டதும் கட்டிட நிர்மாணத்துக்கு வேண்டிய நிதி உதவி கிடைக்கக் கூடியதாக இருக்கும் எனக் குறிப் பிடுவதுமான சான்றிதழ் மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட, அத்தகைய கட்டிட நிர்மாணத்துக்கான நிதிகள் கிடைக்கக்கூடியமை பற்றியும் ;

(ii) தற்போதைக்கான கூட்டாட்சி ஆத னத்தை ஈடுவைப்பதன் மூலம் ஏற் கனவே பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள நிதிகள், தற் போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கு அல்லது சிறுகூறு களுக்கு எதிராகப் பிணைப்பொறுப் பாக்கப்படவுள்ள பணத்தொகை, அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்

திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட அத்தகைய நிதி நிறுவனங்களின் பெயர் என்பவற்றின் விபரங்கள் பற்றியும்.

விண்ணப்பகாரரினால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்று :

(இ) விடயத்துக்கேற்றாற்போல, பதிவுபெற்ற கட்டிடக் கலைஞரால் அல்லது பதிவு பெற்ற உயர்தொழில்சார் குடியியல் அல்லது கட்டிடவமைப்பியல் பொறியியலாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றின்மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட பின்வரும் செயற்பாடுகளுள் ஒவ்வொன்றும் தொடங்கும் உத்தேச தேதியையும் பூரணப்படுத்தப்படும் உத்தேச தேதியையும் காட்டும் மொத்தக் கட்டிட நிர்மாணத்தின் நடைமுறைப்படுத்தல் திட்டம் :

(i) அத்திவாரப் பத்திகள் ;

(ii) சுவர்களின் நிர்மாணம் ;

(iii) மாடிகளின் நிர்மாணம் ;

(iv) கூரைகளின் நிர்மாணம் ;

(v) மனித உறைவிடமாகப் பயன்படுத்தக்கூடிய மட்டம் வரையான இறுதி முடிப்பு வேலை ;

(ஈ) தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குச் செய்யப்படும் மாற்றங்கள், முகாமைக் கூட்டுத்தானத்தினால் பொது அமிசங்களின் கட்டுப்பாடு, நிருவாகம்,

பிரமாணிப்பு அத்துடன் முகாமைத் தேவைப் பாடுகள் மீது ஏதேனும் பாதகமான தாக்கத்தை விளைவிக்கமாட்டாவென அத் தாட்சிப்படுத்தும் பொது முகாமையாள ரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(உ) அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்துக் குச் செய்யப்படவுள்ள அத்தகைய மாற்றங் களுக்காக இயைபான அதிகாரசபை யிடமிருந்தான அங்கீகாரம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் நீக்கம் செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது : —

"கூட்டாட்சியாதன வரைபடத்தை அல்லது பகுதியளவி லான கூட்டாட்சியாதன வரைபடத்தை பதிவு செய்வதன் பயன்.

9. (1) கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவி லான கூட்டாட்சியாதனம் பதிவுசெய்யப்படு வதன்மீது, கூட்டாட்சியாதனத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தில் குறித்துக் காட்டப்பட்ட ஒவ்வொரு கட்டிடமும் அல்லது பகுதியளவாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடமும் சிறுகூறுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாக் கருதப் படுதலும் அதன்கண் அடையாளம் காட்டப் படுதலும் வேண்டும் ; அத்துடன் அதன்மேல், பொது அமிசங்களானவை கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் எல்லாவற்றினதும் சொந்தக்காரர் களால், அவரவர்க்குரிய பங்குச் சிறுகூறுக ளுக்கும் அவரவரால் அவரவரது கூட்டாட்சி யாதனச் சிறுகூறுகள் வைத்திருக்கப்படும் அதே காலப்பகுதிக்கும் பயன்பாட்டுக் காலத்திற்கும் விகிதாரசாரமான முறையில் பொதுவான வாடகைக் குடியிருப்பாளர்கள் என்ற வகையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) பதிவாளர், கூட்டாட்சியாதனை வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் பதிவுசெய்யப்படுவதன்மீது, அதன் கண் கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றின் சொந் தக்காரர் பொது அம்சங்களில் கொண்டிருக்கும் பங்கினைச் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

(3) பொது அம்சங்களில் கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் கொண்டுள்ள பங்குப்பெறுமதியானது, அத்த கைய கூட்டாட்சியாதனச் சிறு கூறு விடயத்துக் கேற்ப, வர்த்தக அல்லது வதிவிட அல்லது வேறுவகையான பயன்பாட்டிற்குரியதா என்ப தைப் பொறுத்து அளிக்கப்படுதல் வேண்டும்.

(4) வேறேதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எவ்விதமிருப்பினும், ஆனால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டாட்சியாதன வரை படமொன்றை அல்லது பகுதியளவிலான கூட் டாட்சியாதன வரைபடமொன்றைப் பதிவுசெய்த தன் பின்னர், அதன்கண் காட்டப்பட்டுள்ள ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறானது, அதனுடன் இணைந்துள்ள பொது அம்சங்க ளோடு ஏதேனும் காணியைப் போன்று அதே முறையிலும் விதத்திலும் வைத்திருக்கப்படலாம், அத்துடன் கையாளவும்படலாம்.

(5) கூட்டாட்சியாதன வரைபடமொன்றை அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடமொன்றைப் பதிவுசெய்வதன்மேல், அதன்கண் காட்டப்பட்டுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறு ஒவ்வொன்றும் அதனோடிணைந்துள்ள பொது அம்சங்களோடு, நீதிமன்றக் கட்டளையி லான நிறைவேற்றுகை உரிமையைப் பிரயோகிப்ப தற்கு அல்லது அத்தகைய ஈட்டுக்கு இணையான சட்டத்தின் நியதிகளின்படி பணவகையிலான நட்டஈடு பெறுவதற்கு ஈடுபெற்றவருக்குள்ள

உரிமைக்கு அல்லது அத்தகைய பதிவு பாதக மாகச் செய்யப்படுவதன் முன்னர் வேறெவரே னுமாளுக்கு கூட்டாட்சியாதனத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தில் இருந்த ஏதேனும் ஈட்டின், விற்பனை உடன்படிக்கையின் அல்லது அக்கறையின் விளைவாக அடையப்பட்ட ஏதேனும் நட்டத்துக்காக பணவகையான நட்டஈடு பெறுவதற்கு அவருக்குள்ள உரிமைக்குப் பங்கமில்லாமல், விடயத்துக்கேற்றாற்போல, கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரரென அல் லது சொந்தக்காரர்களென இயைபான வரை படத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஆளினால் அல்லது ஆட்களினால் முழுமையாகச் சொந்தமாக வைத்தி ருக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

**14.** பின்வரும் புதிய பிரிவானது 9 ஆம் பிரிவை நேரே உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவாகப் பயனு றுதலும் வேண்டும் :—

"தற்போதைக் கான கூட்டாட்சி யாதன வரை படத்தினைப் பதிவு செய்வதன் பயன்.

9அ. தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தைப் பதிவுசெய்ததன்மேல், அதன்கண் குறித்துக்காட்டப்பட்ட தற்போதைக்கான கூட்டாட் சியாதனச் சிறுகூறு ஒவ்வொன்றும், அவற்றோடி ணைந்த பொது அம்சங்களுடன் தற்போதைக்கான கூட்டாட்சியாதனத்தின் சொந்தக்காரர் என இயை பான வரைபடத்தில் விவரிக்கப்பட்ட ஆளினால் பூரணமாகச் சொந்தமாக வைத்திருக்கப்படுவ தாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன், பின்வரும் மட்டுப்பாடுகளுக்கமைவாக, அத்த கைய சொத்தாண்மையை அவர் பிரயோகித்தலும் வேண்டும் :—

(அ) உத்தேச கட்டிடம் கட்டப்படவுள்ள காணித்துண்டைப் பிணைப்பொறுப்பாக்கி தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரை

படத்தைப் பதிவுசெய்வதன் முன்னர் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி யாதன வரைபடத்தைப் பதிவுசெய்த பின்னர் நிறைவேற்றப்பட்ட எவையேனும் ஈடுகள் இருக்குமாயின், அவை அத்தகைய தற்போதைக்கான கூட்டாட்சியா தனச் சிறுகூறு ஒவ்வொன்றுக்கும் விசாலித்தல் வேண்டும் என்பதுடன் ஈடுபெற்றவரின் அல்லது ஈடுபெற்றவர்களின் சம்மதமில்லாமல், வேறு எவரேனும் திறத்தவருக்குச் சாதகமாக, தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுள் அல்லது காணித்துண்டுகளுள் எது தொடர்பாகவும் சாதனம் எதனையும் நிறைவேற்றுவதற்கு உரித்துடையவராவார் ;

(ஆ) பதிவாளருடன் பதிவுசெய்யப்பட்ட தனியான தற்போதைக்கான கூட்டாட்சியாதனச் சிறுகூறின் விற்பனைக்கான எவையேனும் உடன்படிக்கைகள் இருக்குமாயின், பூரண சொத்தாண்மை மீதான பாரபந்தமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு, சொல்லப்பட்ட விற்பனை உடன்படிக்கைக்குத் திறத்தவராகவுள்ள அத்தகைய உத்தேச கொள்வனைகாரரின் உரிமைகளுக்குப் பங்கமின்றிப் பிரயோகிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(இ) சொல்லப்பட்ட கட்டிடம் பகுதியளவாகக் கட்டி முடிக்கப்பட்டு பகுதியவிலான கூட்டாட்சியாதனமாகப் பதிவாளருடன் பதிவுசெய்யப்படும்வரை, பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட, உத்தேச கட்டிடம் கட்டப்படவுள்ள

காணித்துண்டை, ஈட்டு வகையாகவன்றி வேறுவிதமாகச் சொந்தக்காரர் விற்றல், குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல் அல்லது வேறு எம்முறையிலேனும் கையுதிர்த்தல் ஆகாது. ஈட்டுவகையாக வல்லாத வேறுவிதமாக, இந்த ஏற்பாடுகளை மீறி சொந்தக்காரரால் அல்லது அவர் சார்பில் நிறைவேற்றப்பட்ட விற்பனை, குத்தகை, வாடகை அல்லது வேறு ஏதேனும் கையுதிர்ப்பு வெற்றும் வறிதுமாதல் வேண்டும் என்பதுடன் சட்டத்தின் எவ்வித வலுவோ பயனோ கொண்டதுமாதல் ஆகாது :

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகளுள் எதுவும், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்துக்கு இணங்க, ஏதேனும் ஈட்டு முறிமீது அல்லது விற்பனைக்கான ஏதேனும் உடன்படிக்கைமீது வருமதியான தொகையை அறவிடுவதற்காக சொல்லப்பட்ட ஆதனத்தை விற்பனை செய்வதிலிருந்து ஏதேனும் அதிகாரசபையைத் தடுப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பாதிக்கும் பின்னரான ஆதனத்தின் பதிவு.

10. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறில் உரித்தை அல்லது அக்கறையை அல்லது நலனைக்கொள்ளுகின்ற எவரேனும் ஆள், அத்தகைய உரித்து அல்லது அக்கறை அல்லது நலன் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம்

இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய உரித்துக்கு அல்லது அக்கறைக்கு அல்லது நலனுக்கு உரித்துடையவராதல் ஆகாது.

(2) கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றிலுள்ள உரித்தை அல்லது அக்கறையை அல்லது நலனை உரித்து மாற்றுவதற்கான ஏதேனும் சாதனத்தைப் பதிவுசெய்வதற்கென ஏற்றுக் கொண்டதன்மேல், பதிவாளர், விதித்துரைக்கப்பட்ட முறையில், இயைபான கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பிலான உரித்து இடாப்பில் அதனைப் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அவசியமான மாட்டறைதல்களைச் செய்தல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச்சட்டத்தின் 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48 மற்றும் 49 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறு தொடர்பிலான பின்னைய நடவடிக்கை தொடர்பில், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் புதிய பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது, :—

"ஆதனத்துக்கான பொது அம்சங்களிலுள்ள பங்குகள்.

11. பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதனமொன்றுக்கான அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதனமொன்றுக்கான பொது அம்சங்களிலுள்ள பங்கு எதுவும், அத்தகைய

ஆதனத்தின் கூட்டாட்சியாதனச் சிறுகூற்றொன்றுடன் இணைந்தவாறன்றி, கையுதிர்க்கப்படுதலோ அல்லது வேறுவகையாகக் கையாளப்படுதலோ ஆகாது. அத்துடன், ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறைப் பராதீனப்படுத்தல் எதுவும், அத்தகைய பராதீனம் தொடர்பிலான சாதனத்தில் அல்லது உறுதியில் அதுபற்றிய குறிப்பான அல்லது குறிப்பிட்ட குறிப்பீடு எதுவும் செய்யப்படவில்லையென்ற நிகழ்வு எப்படியிருப்பினும், அக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுடன் இணைந்துள்ள பொது அம்சங்களில் சொந்தக்காரருக்குள்ள பிரிக்கப்படாத பங்கினை உரிமை மாற்றுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

"துணைச் சிறுகூறுகள். 11அ. (1) துணைச் சிறுகூறு எதுவும் அல்லது அதன்கண் உள்ள பங்கு அல்லது சொத்துரிமை அல்லது அக்கறை எதுவும், பதிவுசெய்யப்பட்ட இயைபான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது பதிவுசெய்யப்பட்ட இயைபான பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்டவாறாக அத்தகைய துணைச் சிறுகூறானது எக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குச் சேர்ந்ததாக்கப்பட்டுள்ளதோ அக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குப் புறம்பான தன்மையில் கையாளப்படுதல் ஆகாது.

(2) துணைச் சிறுகூறு எதனையும் அல்லது அதன்கண் உள்ள பங்கு அல்லது சொத்துரிமை அல்லது அக்கறை எதனையும், பதிவுசெய்யப்பட்ட இயைபான கூட்டாட்சியாதன வரைபடத்தில் அல்லது பதிவுசெய்யப்பட்ட இயைபான பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில்

அத்தகைய துணைச்சிறுகூறானது எக்கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குச் சேர்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளதோ அச்சிறுகூறுக்குப் புறம்பாகவும் அதற்குச் சேர்ந்ததாகச் செய்திராததும் கையாளும் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரண்படுவதாகச் செய்யப்படும் உறுதியளிப்பு எதுவும், இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுதலாகாது ; அத்துடன் அது பற்றிய பதிவு எதுவும் வெற்றும் வறிதும் ஆதல் வேண்டும் என்பதுடன் துணைச் சிறுகூறிலான ஏதேனும் சொத்துரிமையை அல்லது அக்கறையை உரிமை மாற்றுவதாதலுமாகாது.

(4) அத்தகைய உறுதியளிப்பு எதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளவிடத்து, பதிவாளர், அதனைக் கண்டுபிடிப்பதன்மேல், அப்பதிவினை இல்லாதாக்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இல்லாதாக்குகையினால் பாதிக்கப்பட்டவரான ஆள் எவரும் நட்டஈடு எதற்கும் உரித்துடையவராதலுமாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் இடப்படுகின்றது :—

"கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளை மீளப் பிரித்தல் அல்லது ஒன்றுசேர்த்தல்.

'12. (1) கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் கூட்டாட்சிச் சிறுகூறுகளின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது சொந்தக்காரர்கள், கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின்

மீளப்பிரித்தல் வரைபடத்தை அல்லது ஒன்று சேர்த்தல் வரைபடத்தை பதிவுசெய்வதற்காக, எழுத்தில் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராமுட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும் :—

(அ) விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் ;

(ஆ) உரிமம்பெற்ற நில அளவையாளர் ஒருவரால் அல்லது நில அளவையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் தயாரிக்கப்பட்டு வரையப்பட்டதும் —

(i) மீளப்பிரித்தல் அல்லது ஒன்று சேர்த்தல் காரணமாக, பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் இப்போதுள்ள கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கு அல்லது சிறுகூறுகளுக்குச் செய்யப்பட்ட இயைபான மாற்றங்களைக் காட்ட வேண்டியதும் ;

(ii) மீளப் பிரிக்கப்பட்ட அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளைச் சார்ந்த பொது அம்சங்களில் ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குமுள்ள தனித்தனிப் பங்கின் நூற்று வீதத்தையும் பிரிபடாப் பங்குப் பெறுமதியையும் கூட்டவேண்டியதும் ;

(iii) நிலவுடைமை அளவீட்டு வரைபடத்தின் தொடர்பு இலக்கத்தையும் ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறு கூறினதும் கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழின் முன்னைய பதிவு இலக்கத்தையும் கொடுக்க வேண்டியதும்

ஆன, முப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய (பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் 'மீளப் பிரித்தல் வரைபடம்' அல்லது 'ஒன்று சேர்த்தல் வரைபடம்' எனக் குறிப்பீடு செய்யப் படும்) அளப்பனவு வரைபடம்;

(இ) மீளப்பிரித்தல் வரைபடத்தில் அல்லது ஒன்றுசேர்த்தல் வரைபடத்தில் காட்டப் பட்ட மீளப்பிரித்தல் அல்லது ஒன்று சேர்த்தல் காணியில் இருக்கும் அமைவிடத்துக்கு இசைந்தொழுகுகின்றதெனப் பயன்படும் பதிவுபெற்ற கட்டிடக்கலைஞரிடமிருந்து அல்லது பதிவுபெற்ற குடியியல் அல்லது கட்டமைப்பியல் பொறியியலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(ஈ) மீளப்பிரித்தல் அல்லது ஒன்றுசேர்த்தல், கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் பொது அம்சங்களின் கட்டுப்பாடு, நிருவாகம், பராமரிப்பு அத்துடன் முகாமைத் தேவைப்பாடுகள் மீது, ஏதேனும் பாதகமான தாக்கத்தை விளைவிக்கமாட்டாதென அத்தாட்சிப்படுத்தும் கூட்டாட்சியாதன முகாமை அதிகார

சபையின் பொதுமுகாமையாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ;

(உ) அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்துக்குச் செய்யப்படவுள்ள அத்தகைய மீளப் பிரித்தலுக்கு அல்லது ஒன்றுசேர்த்தலுக்கு இயைபான அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரம் ;

(ஊ) அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குச் செய்யப்படவுள்ள அத்தகைய மீளப் பிரித்தலுக்கான அல்லது ஒன்றுசேர்த்தலுக்கான இயைபான ஈடுபெற்றவர், எவரேனும் இருப்பின், அவரின் சம்மதமும்;

(எ) விண்ணப்பகாரரினால் செய்யப்பட்டு பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, பின்வருவனவற்றைக் கொண்டிருக்கவேண்டியதான, வெளிப்படுத்துகையொன்று :—

(i) மீளப்பிரிக்கப்பட்ட அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட இயைபான கூட்டாட்சியாதனச் சிறுகூறின் அல்லது சிறுகூறுகளின் சொந்தக்காரரின் அல்லது சொந்தக்காரர்களின் பதிவுசெய்யப்பட்ட முழுப்பெயரும் முகவரியும் கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழ்கள் தொடர்பிலான குறிப்பீட்டு இலக்கங்களும் ;

(ii) மீளப்பிரிக்கப்பட்ட அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட ஒவ்வொரு கூட்டாட்சியாதனச் சிறுகூறினதும் சொந்தக்காரர்களின் முழுப்பெயர்களையும் முகவரிகளையும் அத்தகைய

மாற்றங்களுக்காக நம்பியிருக்கும் சாதனங்களின் அல்லது ஆவணங் களின் தன்மையையும் கொடுத்து, சொத்தாண்மைக்குச் செய்யப்பட வுள்ள மாற்றங்கள் ;

(iii) அத்தகைய மீளப்பிரித்தலுக்கும் ஒன்றுசேர்த்தலுக்கும் முன்னரும் பின்னரும் அத்தகைய சிறுகூறுக ளோடு இணைந்துள்ள பொது அம்சங்களில் ஒவ்வொரு கூட்டாட் சியாதனக் கூறினதும் பிரிபடாப் பங்குப் பெறுமதியும் அத்தகைய பெறுமதியின் நூற்றுவீதமும் ;

(iv) கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாத னத்தின் கூட்டாட்சியாதனச் சிறு கூறின் அல்லது சிறுகூறுகளின் சொந்தக்காரரின் அல்லது சொந் தக்காரர்களின் கையொப்பம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவில் "கூறு" என்னுஞ் சொல் காணப்படுமிடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "சிறுகூறு" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் "கூறுகள்" என்னுஞ் சொல் காணப்படுமிடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "சிறுகூறுகள்" என்னும் சொல்லை யிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவில், "கூறுகள்" என்னுஞ் சொல் காணப்படுமிடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "சிறுகூறுகள்" என்னுஞ் சொல்லை யிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவில் "கூறு" அத்துடன் "கூறுகள்" என்னுஞ் சொற்கள் காணப்படுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக முறையே "சிறுகூறு" மற்றும் "சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(5) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப்பதிவுச் சட்டத்தின் 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48 மற்றும் 49 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், சாதனத்தை நிறைவேற்றுதல் தொடர்பாகவும் பதிவுசெய்தலுக்கும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.".

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவில் "கூறு" அத்துடன் "கூறுகள்" என்னுஞ் சொற்கள் காணப்படுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக முறையே "சிறுகூறு" அத்துடன் "சிறுகூறுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவில் "கூறு" அத்துடன் "கூறுகள்" என்னுஞ் சொற்கள் காணப்படுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக முறையே "சிறுகூறு" அத்துடன் "சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கூறொன்றின் சொந்தக்காரரொருவர்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றின் சொந்தக்காரரொருவர்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவில் "கூறுகள்" என்ற சொல் காணப்படுமிடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "சிறுகூறுகள்" என்னுஞ் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவு, அப்பிரிவில் "கூறு" அத்துடன் "கூறுகள்" என்னுஞ் சொற்கள் காணப்படுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக முறையே "சிறுகூறு" அத்துடன் "சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கூறுகள்" என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக "கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் "கூட்டாட்சியாதன வரைபடம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன வரை படம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "கூட்டாட்சி ஆதனம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் "கூறுகள்" என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(3) இச்சட்டத்தின் தொழிற்பாட்டின் பயனாக முகாமைக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கமைவாக அவ்வாறு தாபித்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தைக் கூட்டி, முதலாவது பேரவையைத் தெரிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பதவிவகிக்காதொழிதலும் வேண்டும். முதலாவது பேரவை தெரிவுசெய்யப்பட்டதன்மேல், முதலாம் அட்டவணையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பேரவையானது முகாமைக் கூட்டுத்தாபனத்தின் கடமைகளைப் புரிதலும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் அதன் அலுவல்களைக் கொண்டு . . த்துதலும் வேண்டும்.".

(4) அப்பிரிவின் (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளில் "கூறு" என்ற சொல்லுக்குப் பதிலாக "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில், "கூறுகளினதும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "சிறுகூறுகளினதும்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும், "கூட்டாட்சியாதனத்துக்கு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனத்துக்கு அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன மூலமும் ;

(6) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவினை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

(8) பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனம், அத்தகைய பகுதியளவிலான கூட்டாட்சியாதனம் கூட்டாட்சியாதனமொன்றாக மாற்றப்பட்டதன் பின்னர் உடனடியாக அத்தகைய கூட்டாட்சியாதனம் பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்டதன்மேல், பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதனத்தின் முகாமைக் கூட்டுத்தாபனமாகத் தொடர்ந்து பணிபுரிதல் வேண்டும் ;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20இ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் "கூறு" அத்துடன் "கூறுகள்" என்னுஞ் சொற்கள் காணப்படுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, முறையே "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" மற்றும் "கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்,—

(அ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியில், "கூட்டாட்சியாதனம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியை நேரே உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(எஎ) அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்துக்கு முரணாக ஏதேனும் கூட்டாட்சியாதனத்திற்கு அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்திற்குச் செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்படாத எவையேனும் கட்டிட நிர்மாணங்களை அகற்றுமாறும் அவ்வாறு அகற்றுவதற்கு கூட்டாட்சியாதன முகாமை

அதிகாரசபையை அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது உள்ளூரதிகார சபையை வேண்டிக்கொள்ளுமாறும் இவற்றுக்கு உதவி வழங்குமாறும் தேவைப்படுத்தும் ஏதேனும் அரசாங்க, பகிரங்க அல்லது நியதிச்சட்ட முறையான அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலுக்கு அல்லது கட்டளைக்கு இணங்கியொழுகுதல் :";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நேரே உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துவதன் மூலமும் :–

"(அ,அ) சேவைக்கட்டணங்களையும் அத்தகைய நுகர்வுகளுக்கான மாதாந்தக் கட்டணங்களையும் அறவிடுவதன்மீது, கட்டிடத்தின் எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்கும் நீர், மின்சாரம் ஏனைய பயன்பாட்டுச் சேவைகள் வழங்குவதற்காகவும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் எல்லாச் சொந்தக்காரர்களுக்கும் அத்தகைய சேவைகளை வழங்குவதற்கும் தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சாரசபை, உள்ளூரதிகாரசபை, வேறு ஏதேனும் அதிகாரசபை அல்லது வேறு எவரேனும் உரிமம் பெற்றவர் என்போருடன் ஒப்பந்தஞ்செய்தல் ;

(அ,ஆ) நீருக்கான அல்லது மின்சாரத்துக்கான அல்லது வேறு பயன்பாட்டுச் சேவைகளுக்கான தனிப்பட்ட வழங்கல் தொடுப்புக்களைத் துண்டிப்பதன் மூலம், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அல்லது இலங்கை மின்சாரச் சபையினால் அல்லது உள்ளூரதிகார சபையினால்

அல்லது, வேறு அதிகாரசபையினால் அல்லது உரிமம்பெற்றவரால் வழங்கப்பட்ட நீர், மின்சாரம் ஏனைய பயன்பாட்டுச் சேவைகள் என்பவற்றின் நுகர்வுக்காக மாதாந்தக் கட்டணங்களை அறவிடுவதற்கான ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுத்தலும் ; கூட்டாட்சியாதனச் சிறுகூறின் அல்லது சிறுகூறுகளின் அந்தந்தச் சொந்தக்காரரால் அல்லது சொந்தக்காரர்களால் அந்தந்தக் கட்டணங்கள் முகாமைச் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படும் வரை, அத்தகைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கான அத்தகைய வழங்குகையைத் தொடர்ந்து இடைநிறுத்திவைத்தலும் ;";

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நேரே உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஆஆ) அவரவரது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பங்குச் சிறுகூறுகளுக்கான விகிதாசாரப்படி எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரர்களிடமிருந்து, 20ஏ என்னும் பிரிவிற் குறிப்பிடப்பட்ட நோக்கத்துக்காக மாதாந்த உதவுதொகையொன்றை விதித்தலும் அத்தகைய உதவுதொகையை கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் எல்லாச் சொந்தக்காரர்களிடமிருந்தும் அறவிடுதலும் ;

(இ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை நேரே உடனடுத்துப் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஊ) அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்துக்கு முரணாக கூட்டாட்சியாதனத்துக்கு அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்துக்குச் செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்

படாத கட்டிட நிர்மாணங்களைத் தடுப்பதற்கும் அகற்றுவதற்கும் வேண்டிய எல்லா நடவடிக் கைகளையும் அத்தகைய அதிகாரமளிக் கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்று வதற்கு கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபையை அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையை அல்லது உள்ளூர் அதிகாரசபை யைக் கேட்டுக்கொள்ளுதலும் அல்லது அவற் றுக்கு உதவியளித்தலும்.".

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஈ என்னும் பிரிவு, அப்பிரிவில் "கூறு" அத்துடன் "கூறுகள்" என்ற சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, முறையே "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" அத்துடன் "கூட் டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20உ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20உ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "முகாமைக் கூட்டுத்தாபனத்தினது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபையினது அல்லது முகாமைக் கூட்டுத்தாப னத்தினது" என்னும் சொற்களை இடுவதன் மூல மும்;

(2) அப்பிரிவில் "கூறு" என்னுஞ் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "கூட்டாட்சி யாதனச் சிறுகூறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஊ என்னும் பிரிவு, அப்பிரிவில் காணப்படும் "கூறுகள்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20எ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20எ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கூட்டாட்சியாதன வரைபடம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள துணைவிதிகள், கூட்டாட்சியாதன வரைபடமொன்று அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடமொன்று பதிவுசெய்யப் படுவதிலிருந்து துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடம் ஒவ்வொன்றும் தொடர்பில் எல்லா நோக்கங் களுக்காகவும் வலுவில் இருத்தல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(4) முகாமைக் கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் சொந்தக்காரர்களினால் அவதானிக்கப்படவேண்டிய பாதுகாவல் மற்றும் பாதுகாப்பு வழிவகைகள், பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ள பொது ஆதனத்தின் விவரங்கள், செல்லப்பிராணிகளை வளர்த்தல், தரிப்பிடம், தரைவிரிப்புகள், குப்பை கூளம் அகற்றுதல், பழக்கவழக்க, கட்டிடக்கலை மற்றும் நிலவமைப்பியல் வழிகாட்டுநெறிகள் அத்துடன் இயைபான பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட

பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் கூட்டாட்சியாதனச் சிறு கூறுகளினதும் பொது அம்சங்களினதும் வினைத் திறமையாக முகாமைக்குத் தோதான வேறு எவை யேனும் கருமங்கள் என்பவற்றுக்கென, இச்சட்டத் துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள துணைவிதிகளுக்கு ஒவ்வாதனவாகவிராத மேலதிகத் துணைவிதிகளை விசேட தீர்மானத்தின்மூலம் ஆக்கலாம்.":

(4) அப்பிரிவின் (1) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளில், "கூறுகள்" என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக "கூட் டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடு வதன் மூலமும் :—

"(6) முகாமைக் கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டாட் சியாதன முகாமை அதிகாரசபை —

(அ) காலத்துக்குக்காலம் வலுவிலிருப்பனவான துணைவிதிகள் பற்றிய பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும் ;

(ஆ) கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றின் சொந்தக் காரர் ஒருவரால் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றின் சொந்தக்காரர் சார்பில் விண்ணப்பம் செய்வதற்கென உரிம முறை யில் அதிகாரமளிக்கப்பட்டவரான ஆள் ஒருவரால், வலுவிலிருப்பனவான துணை விதிகளின் பிரதியொன்றுக்கென எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று பெற்றுக்

கொள்ளப்படுவதன்மீது, அத்தகைய சொந்தக் காரருக்கு அல்லது உரியமுறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆளுக்கு நியாயமான விலை யில் துணைவிதிகளின் பிரதியொன்றினை வழங்குதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அவ்வாறு விண்ணப்பம் செய்வதற்குத் தாம் தகுந்த அக்கறை உடையவராயிருந்தார் என கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையை அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தைத் திருப்திப்படுத்தும் எவரேனும் ஆளினது விண்ணப்பத்தின்மீது, துணைவிதிகளைப் பார்வையிடுவதற்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்.";

(6) அப்பிரிவின் (7) ஆம் (10) ஆம் உட்பிரிவுகளில் "கூறு" என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக "கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் :—

(7) அப்பிரிவின் (9) ஆம் பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும் :—

"(9) கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை அல்லது முகாமைக் கூட்டுத்தாபனம் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர் —

(அ) ஏதேனும் துணைவிதிக்கு இணங்கியொழுகுவதற்குப் பிணிக்கப்பட்டவரான எவரேனும் ஆளினால் அல்லது கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையினால் அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது நிருவாகியினால் அத் துணைவிதி அனுசரிக்கப்படுவதனை வலுவுக்கிடுவதற்கான அல்லது அதன் மீறுகை தடுக்கப்படுவதற்கான கட்டளையொன்றுக்கென ; அல்லது

(ஆ) ஏதேனும் துணைவிதிக்கு இணங்கியொழுகு வதற்குப் பிணிக்கப்பட்டவரான எவரேனும் ஆளிடமிருந்து, அல்லது கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையிடமிருந்து அல்லது முகாமைக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அல்லது நிருவாகியிடமிருந்து அதன் மீறுகையிலிருந்து எழுவதான, எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் ஆதனத்துக்கு நேர்ந்த ஏதேனும் இழப்புக்கான அல்லது ஊறுக்கான சேதஈடுகளை அறவிடுவதற்கென,

நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் அல்லது உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன் நீதிமன்றமானது, அது பொருத்தமானதென எண்ணும் அத்தகைய கட்டளையை எவரேனும் அத்தகைய ஆளுக்கு, முகாமைக் கூட்டுத்தாபனத்துக்கு அல்லது அதன் பேரவையின் உறுப்பினர்களுக்கு அல்லது நிருவாகிக்கு எதிராக ஆக்கலாம்".

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஏ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன்மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(1) முகாமைக் கூட்டுத்தாபனம் நிருவாகச் செலவுகளுக்காக நிதியமொன்றைத் தாபித்து, அதற்குள் பின்வருவனவற்றைச் செலுத்துதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தினால் விதிக்கப்பட்டு, நிதியத்துக்குள்ளாகச் செலுத்தப்படுவதற்கெனச் சொந்தக்காரர்களினால் செலுத்தப்பட்ட உதவு தொகைகள் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் விதிக்கப்பட்டு, நிதியத்துக்குள்ளாகச் செலுத்தப்படுவதற்கெனச்

சொந்தக்காரர்களினால் செலுத்தப்பட்ட குற்றப்பணங்கள், வட்டிகள், தண்ட இறுப் பனவுகள், கட்டுப்பணங்கள், மீளத்தொடுத்தல் கட்டணங்கள் மற்றும் வைப்புகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் ஆள்சார் ஆதனம் எதனையும் விற்றுத் தீர்ப்பதன் மூலம் பெறப்பட்ட வரும்படிகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பவற்றைப் பிரயோகிப் பதில், நிறைவேற்றுவதில் அத்துடன் புரிவதில் அதனால் பெற்றுக் கொள்ளப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் ;

(உ) இலங்கையிலாயினுஞ்சரி இலங்கைக்கு வெளி யிலாயினுஞ்சரி, எத்தன்மைத்தான எம்மூலங் களிலிருந்தும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியங்கள் வகையா கக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்படக்கூடிய வாறான அத்தகைய பணத்தொகைகள் யாவும்.";

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1அ) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வரையறைக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதில், நிறைவேற்றுவதில் அத்துடன் புரிவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத் தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய பணத்தொகைகள் யாவும் கூட்டுத்தா பனத்தின் முகாமை நிதியத்திலிருந்து செலுத்தப்படு தல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(2) முகாமைக் கூட்டுத்தாபனமானது ஏகமனதான தீர்மான மூலம் அல்லது பொதுத் தீர்மான மூலமும் கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் ஒருப்பாட்டுடனும், அது பொருத்தமானதெனக் கருதும்வாறாக, முகாமை நிதியத்திலுள்ள எவையேனும் பணங்களை முதலீடு செய்யலாம் ;

ஆயின், எவ்வாறாயினும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றுடனான எவையேனும் நிலையான வைப்புக்களில், திறைசேரி உண்டியல்களில், அரச ஈட்டு, முதலீட்டு வங்கியில் அல்லது வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் முதலீடு செய்வதற்கு அத்தகைய தீர்மானமும் ஒருப்பாடும் தேவைப்படுதலாகாது.";

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(3) முகாமை நிதியத்தைத் தாபித்தும் பேணும் நோக்கங்களுக்காக, முகாமைக் கூட்டுத்தாபனமானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டம் ஒன்றில் —

(அ) உதவு தொகைகளாகத் திரட்டப்பட வேண்டிய பணத்தொகைகளைக் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கலாம் ;

(ஆ) அவரவரது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளில் பங்குச் சிறு கூறுகளுக்கான விகிதாசாரத்தில் எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும் சொந்தக்காரர்களிடமிருந்து உதவு தொகைகளை விதித்தறவிடுவதன் மூலம் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட பணத் தொகைகளைத் திரட்டலாம் ;

(இ) காலம் பிந்திய உதவு தொகைகள் தொடர்பில் கூட்டாட்சியாதனச் சிறுகூறொன்றின் சொந்தக் காரரால் செலுத்தப்படற்பாலதான வட்டித் தொகையினைத் தீர்மானிக்கலாம் :

(ஈ) அந்தந்தக் கூட்டாட்சியாதனச் சிறு கூறுகளுக்கு வழங்கப்படுவதும் அத்தகைய கூட்டாட்சி யாதனச் சிறுகூறின் சொந்தக்காரரினால் கொடுபடற்பாலதுமான, நீர், மின்சாரம் அல்லது வேறு பயன்பாட்டுச் சேவைகள் போன்ற சேவைகளைத் துண்டிக்கும் பட்சத்தில், வைப்புப் பணத்தொகையை அல்லது தண்ட விதிப்பனவுகளை அல்லது மீளக்கொடுக்கும் கட்டணங்களைத் தீர்மானிக்கலாம்." ;

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நேரேயுடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :–

(3அ) முகாமைக் கூட்டுத்தாபனம், முகாமை நிதியத்தின் பாகமாக, பொது அம்சங்களுக்கான எவையேனும் பாரிய பழுதுபார்ப்பு வேலைகளின் அவசரச் செலவினங்களுக்காக அல்லது கூட்டுத்தாபனத்தின் அதையொத்த வேறேதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக, (இதனகத்துப்பின்னர் "கடனாழ் நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடனாழ் நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன் –

(அ) காலத்துக்குக் காலம் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் கடனாழ் நிதியத்துக்கு ஒதுக்கப்பட வேண்டிய பணத்தொகைகள் பற்றித் தீர்மானித்தல் வேண்டும் ;

(ஆ) செலவாக உறப்பட வேண்டிய குறித்துரைக் கப்பட்ட பணத்தொகை தொடர்பாக கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின்

ஒருப்பாட்டுடன், விசேட தீர்மானமொன்று அல்லது பொதுத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டாலொழிய, கடனாய் நிதியத்திலிருந்து எச்செலவினத்தையும் உறுவதற்கு முற்படுதல் ஆகாது.

(6) அப்பிரிவின் (4), (5), ஆகிய (6) உட்பிரிவுகளில், "கூறு" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஒ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஒ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் "கூறு" என்னுஞ் சொல் காணப்படுமிடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நேரேயுடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(6அ) இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், முகாமைக் கூட்டுத்தாபனத்தினால் இச்சட்டத்தின் 20ஏ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி கோரப்பட்ட பணத்தொகைகளுள் எதனையும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரர் செலுத்தத் தவறுவாராயின், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சாரசபை, உள்ளூர் அதிகாரசபை, வேறேதேனும் அதிகாரசபை அல்லது உரிமம் பெற்றவர் என்பவற்றுக்கூடாக தனிப்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்கு வழங்கப்பட்ட நீர், மின்சாரம் அல்லது வேறு எவையேனும் பயன்பாட்டுச் சேவைகள் போன்ற சேவைகளைத் துண்டிப்பது

தொடர்பிலான தத்துவங்களை முகாமைக்கூட்டுத் தாபனம் கொண்டிருத்தல் வேண்டும். முகாமைக் கூட்டுத்தாபனம் —

(அ) அவ்வாறு துண்டிப்பதற்காக விசேடமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று இருந்தாலொழிய ;

(ஆ) தீர்மானத்தின் பிரதியுடன் உத்தேச துண்டிப்புக்கான பதினான்கு நாள் அறிவித்தல் குறிப்பிட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தாலொழிய,

அத்தகைய வழங்கலை துண்டிக்க நடவடிக்கை எடுத்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஒ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஒ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "உறுப்பினர்களாகவுள்ள ஆட்களால்" என்பது தொடங்கி அவ்வுட்பிரிவு முடியவுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"உறுப்பினர்களாவுள்ள ஆட்களால், ஒவ்வொரு கூட்டாட்சியாதன சிறுகூறினதும் சொந்தக்காரரால் அல்லது சொந்தக்காரர்களாக உள்ள உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள், எல்லாக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளினதும் கூட்டுமொத்தமான பங்குச் சிறுகூறுகளுக்கு அந்தக் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் பங்குச் சிறுகூறு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில் அவ்வாறு உறப்பட்டதுமான பணத்தின் அத்தகைய விகிதாசாரத்துக்கு மட்டுமே அத்தகைய உத்தரவாதத்தின்கீழ் பொறுப்புடையவராகவிருப்பதாக உத்தரவாதமளிக்கப்படுதல் வேண்டும்.".

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஔ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கூறு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஔ என்னும் பிரிவைத் திருத்துதல்.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20க என்னும் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது; :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 20க என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவில் "கூறு" என்னும் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறு கூறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) "முகாமைக் கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை அல்லது முகாமைக் கூட்டுத்தாபனம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ங என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ங என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவில் "கூட்டாட்சியாதனம்" என்னும் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம், அதற்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவில், "பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடம்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் அதற்குப் பதிலாக, "பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடம்" அல்லது "பதிவு செய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ரு என்னும் பிரிவைத் திருத்துதல்.

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ரு என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில், "கூட்டாட்சியாதன வரைபடம்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவில் "கூறு" என்னும் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதனச் சிறு கூறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(அ) கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்கும் காப்புறுதியாளருக்கும் உடனடியாக அறிவித்து, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தின் சேதப்படுத்தப்பட்ட பாகத்தினை மீளக் கட்டியமைத்து, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் மேற்பார்வைக்கமைவாக, துணைப்பிரிவாக்கப்பட்ட கட்டிடத்தினை முழுமையாக அல்லது பகுதியளவில் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதற்குத் திட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ட என்னும் பிரிவைத் திருத்துதல்.

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ட என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில், "கூட்டாட்சி ஆதன வரைபடம்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதன வரைபடம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவில், "கூட்டாட்சியாதனம்" என்னுஞ் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவில் "கூறு" மற்றும் "கூறுகள்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிக்குப் பதிலாக, முறையே "சிறுகூறு" அல்லது "கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பதிவாளரிடம்" என்னுஞ் சொல்லுக்குப் பதிலாக, "பதிவாளரிடமும் "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையிடமும்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(இ) பதிவாளர், விடயத்திற்கேற்றாற்போல, கூட்டாட்சியாதனச் சிறுகூறு அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் தொடர்பான கூட்டாட்சியாதன உரித்துச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டதன்மேல் கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனத்தின் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் இடாப்புகளில் அவசியமான பதிவுகளைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் கைமாற்றம் பெற்றவர் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அக்காணித்துண்டைக் கையாளுதல் வேண்டும் ;";

(6) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(10) ஐந்தாம் உட்பிரிவினைப் பின்பற்றி கூட்டாட்சி யாதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி யாதனத்தின் கைமாற்றம் ஒன்று பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவரால் பதிவு செய்து கொள்ளப் படுமிடத்து, முகாமைக் கூட்டுத்தாபனமானது, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையின் மேற் பார்வைக்கமைவாக, அதன் அலுவல்களை ஒடுக்கும் நோக்கத்துக்காக தொடர்ந்தும் இருத்தல் வேண்டும்.";

(7) அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவில், "முகாமைக் கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை" அல்லது "முகாமைக் கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(8) அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(12) முகாமைக் கூட்டுத்தாபனத்தை ஒடுக்கு வதனை நிறைவேற்றும் நோக்கத்துக்காக நீதிமன்றத் தினால் ஒழிப்போன் ஒருவர் நியமிக்கப்பட்டா லன்றியும் நியமிக்கப்படும் வரையும், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் பேரவையானது, முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை ஒடுக்கும் நோக் கத்துக்காக, கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபையின் மேற்பார்வைக்கமைவாக, முகாமைக் கூட்டுத்தாபனத்தின் தொழிலைத் தொடர்ந்தும் புரிந்துவருதல் வேண்டும். ஒழிப்போன் ஒருவர் நியமிக்கப்பட்டதன்மேல், முகாமைக் கூட்டுத்தாப னத்தின் பேரவைக்குள்ள எல்லாத் தத்துவங்களும் இல்லாதொழிதல் வேண்டும் என்பதுடன், முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை ஒடுக்கும் நோக்கத்துக்காக, கூட்டாட்சியாதன முகாமை அதிகார சபையின் மேற்பார்வைக்கமைவாக, அதன் தொழி லைத் தொடர்ந்தும் கொண்டுநடாத்துவதற்கு ஒழிப் போன் தத்துவம் கொண்டவராதலும் வேண்டும்.";

(9) அப்பிரிவின் (14) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"(14) நீதிமன்றமானது, கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையினது அல்லது முன்னைய சொந்தக்காரர் ஒருவரினது, முன்னைய ஈடுபெறுநர் ஒருவரினது அல்லது ஒழிப்போனினது விண்ணப்பத்தின் மேலும் முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் ஒடுக்கப்பட்டுள்ளன எனத் திருப்திப்பட்டதன்மேல மேலும், ஒழிப்போன் விடுவிக்கப்படலாம் எனவும் முகாமைக் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் வேண்டும் எனவும் கட்டளையிடலாம் என்பதுடன் அத்தகைய கட்டளையினை இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்வதற்கென சமர்ப்பித்ததன்மேல், உரித்துப் பதிவாளர் பதிவு செய்துகொண்டு, கூட்டாட்சியாதன அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதனச் சிறுகூறுகள் தொடர்பிலான உரித்து இடாப்பிலுள்ள பதிவேடுகளை நீக்கஞ்செய்தலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய நீக்கம் பற்றிக் கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைக்கு அறிவித்தலும் வேண்டும் :".

41. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "துணைக்கூறு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"துணைச் சிறுகூறு" என்பது தனிவேறான சொத்தாண்மைக்கு முன்னப்பட்டதும் ஏதேனும் நோக்கத்துக்காக வேறேதேனும் குறித்துரைக்கப்பட்ட கூட்டாட்சியாதன சிறுகூறுடன் அல்லது கூட்டாட்சியாதன சிறுகூறுகளுடன் இணைந்திருப்பதுமான ஒரு சிறுகூறு என்று பொருளாகும் ;";

(2) "கட்டிடம்" என்பதன் வரைவிலக்கணத்தில், "கூட்டாட்சியாதனத் துணைப்பிரிவாக்கல் வரைபடத்திற்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதன வரைபடத்திற்கான அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்திற்கான அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்திற்கான" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) "பொதுவசதிகள் சபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை" என்பது 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பொது வசதிகள் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபை என்று பொருளாகும் ;";

(4) "பொது அம்சங்கள்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் —

(அ) "கூட்டாட்சி ஆதனம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) "கூட்டாட்சி ஆதன வரைபடம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன ஆதன வரைபடம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) "அக்காணியின்" என்ற சொல்லுக்குப் பதிலாக 'அக் காணித்துண்டில்' என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(ஈ) "கூறு" என்ற சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) "கூட்டாட்சியாதன வரைபடம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் "கூட்டாட்சியாதன வரைபடம்" என்பது —

(அ) அதற்கான தலைப்பில் அல்லது தலையங்கத்தில் கூட்டாட்சியாதன வரைபடம் என விவரிக்கப்பட்டதும் ;

(ஆ) அதனகத்து அடங்கியுள்ளதான காணித் துண்டு முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளாகப் பிரிக்கப்பட்ட, கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்தை அல்லது ஒரேயொரு மாடியை மாத்திரம் கொண்டு சிறுகூறுகளாக உபபிரிவாக்கஞ் செய்யப்படக்கூடிய ஏதேனும் கட்டிடத்தைக் காட்டுவதும் ; அத்துடன்

(இ) பிரிவு 5 இல் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்டுள்ளதும்

ஆன கூட்டாட்சியாதன வரைபடம் என்று பொருளாகும் ;";

(6) "கூட்டாட்சியாதன வரைபடம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும் :—

"கூட்டாட்சி ஆதனச் சிறுகூறு" என்பது கூட்டாட்சி யாதன வரைபடம் ஒன்றில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரை படம் ஒன்றில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் ஒன்றில் தனியானதொரு சிறுகூறாகக் காட்டப்பட்டுள் ளதும் ஒரு மாடிக்கு மேற்பட்ட மாடிகளைக் கொண்ட கட்டிடம் முழுவதையும் அல்லது ஒரு மாடியின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாடிகளின் பாகத்தை இடங்கொள்வதா யினுஞ்சரி, ஒன்றோ பலவோவாய அறை களைக் கொண்டதாய் தனிப் பயன்பாட்டுக் கென வடிவமைக்கப்பட்டதும் தனியான கூட்டாட்சியாதனச் சிறுகூறாகக் காட்டப் பட்டதுமான வரையறுக்கப்பட்ட இடைவெளி என்று பொருளாகும் ;";

(7) 'பாரபந்தம்' என்ற வரைவிலக்கணத்தில், "கூறு" என்ற சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாகச் "சிறுகூறு" என்னுஞ் சொல்லை இடுவதன் மூலமும் ;

(8) 'காணி' என்ற சொல்லின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தினை இடுவதன் மூலமும் :—

"காணித்துண்டு" என்பது ஏதேனும் உடைமையுரிமைக்குட்பட்ட காணியையும் ஏதேனும் கட்டிடத்தை அல்லது அதன் பாகத்தையும் எவரேனும் சொந்தக்காரரால் நியாயமாகப் பயன்படுத்தப்படக்கூடிய அல்லது துய்க்கப் படக்கூடிய, மேற்பரப்புக்கு மேலேயுள்ள அந்த அளவினதான வான்வெளியையும் அத்துடன் மேற்பரப்பிலிருந்தும் அதன்கண் உள்ள ஏதேனும் சொத்து நிலைமையிலிருந் தும் அல்லது அக்கறையிலிருந்தும் வேறாக

வைத்திருக்கப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ் சரி (1973 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் நீங்கலாக) மேற்பரப்புக்குக் கீழாகவுள்ள எல்லாப் பதார்த்தங்களையும் உள்ளடக்கும் :";

(9) 'உள்ளூர் அதிகாரசபை' என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "கூட்டாட்சி ஆதனம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(10) "முகாமைக் கூட்டுத்தாபனம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"முகாமைக் கூட்டுத்தாபனம்" என்பது கூட்டாட்சி ஆதன வரைபடம் ஒன்றில் காட்டப்பட்ட ஒரு அல்லது ஒன்றுக்கும் அதிகமான துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிமுடிக்கப்பட்ட ஏதேனும் ஒரு அல்லது பல் கட்டிடங்கள் தொடர்பில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தில் காட்டப்பட்ட பகுதியளவில் கட்டிமுடிக்கப்பட்ட ஏதேனும் ஒரு அல்லது பல கட்டிடங்கள் தொடர்பில், அக் கட்டிடங்களுக்கெனத் தாபிக்கப்பட்ட முகாமைக் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும்.";

(11) "சொந்தக்காரர்" என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்தில் "கூறு" என்ற சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதனச் சிறுகூறு" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(12) "விதித்துரைக்கப்பட்ட" என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வருவதனை இடுவதன் மூலமும் ;

"தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம்" என்பது —

(அ) அதற்கான தலைப்பில் அல்லது தலையங்கத்தின் தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் என விவரிக்கப்பட்டது ;

(ஆ) காணித்துண்டு முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, கட்டியமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள, சிறுகூறுகளாக உபபிரிவாக்கஞ் செய்யப்படக்கூடிய ஏதேனும் கட்டிடத்தைக் காண்பிப்பதும் ;

(இ) பிரிவு 5அ என்பதில் தரப்பட்டுள்ள விவரங்களைக்கொண்டுள்ளதும்.

ஆன தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடம் என்று பொருளாகும் ;

"உத்தேச கொள்வனைகாரர்" என்பது கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரரிடமிருந்து கூட்டாட்சி ஆதனச் சிறுகூறை அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனச் சிறுகூறை கொள்வனை செய்வதற்கு உடன்படுகின்ற, விற்பனை உடன்படிக்கைக்கான திறத்தவராகவுள்ள ஆளொருவர் என்று பொருளாகும் ;

"அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்" என்பது —

(அ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஏதேனும்

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி என்று ; அல்லது

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பெனி என்று ; அல்லது

(இ) 401 ஆம் அத்தியாயமான தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ் தேசிய வீடமைப்பு ஆணையாளருடன் பதிவு செய்துகொண்ட கட்டிடச் சங்கம் என்று ;

(ஈ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்று; அல்லது

(உ) ஏதேனும் சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கி என்று

பொருளாகும்.

(13) 'பதிவாளர்' என்ற சொல்லுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

'பதிவாளர்' என்பது 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரும் கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம் அமைந்துள்ள பதிவு மாவட்டத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டிருப்பவருமான உரித்துப்பதிவாளர் என்று பொருளாகும் :";

(14) "பதிவாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

"பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம்" என்பது —

(அ) அதற்கான தலைப்பில் அல்லது தலையங்கத்தில் பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடம் என விவரிக்கப்பட்டதும் ;

(ஆ) வருங்காலத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளின் நிர்மாணத்திற்கான ஏற்பாடுகளுடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளாகத் துணைப் பிரிவாக்கம் செய்யக்கூடிய வசதியுடைய அல்லது சிறுகூறுகளாக துணைப்பிரிவாக்கஞ் செய்யக்கூடிய வசதியுடைய ஒரு மாடியைக் கொண்டதும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டதுமான கட்டிடமொன்றை அதன்கண் கொண்டிருக்கும் காணிச் சிறுகூறு முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் காட்டுவதும் ;

(இ) பிரிவு 5ஆ என்பதில் தரப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கியதும் ;

(ஈ) பூர்த்திசெய்யப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாட்சியாதன சிறுகூறுகளையுடையதும் அத்தகைய கூட்டாட்சியாதன சிறுகூறுகள் மனித குடியிருப்பிற்குப் பொருத்தமானவையாக அமைந்திருப்பனவுமான,

பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடமொன்று என்று பொருள்படும் ;

(15) "பங்குக்கூறு" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :—

"பங்குச் சிறுகூறு" என்பது கூட்டாட்சியாதனச் சிறுகூறு ஒன்றின் தொடர்பில், அதன் பங்குப் பெறுமதிக்கு இணங்க அக்கூட்டாட்சி யாதனச் சிறுகூறுக்கெனத் தீர்மானிக்கப்பட்டதும் கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் புறக்குறிப்பிடப்பட்டதுமான அட்டவணையில் அத்தகையனவெனக் காண்பிக்கப்பட்டதுமான பங்குச் சிறுகூறுகள் எனப் பொருளாகும் ;";

(16) "மாடி" என்ற சொல்லின் வரைவிலக்கணத்தில், "காணி" என்ற சொல்லுக்குப் பதிலாக, "காணித் துண்டு" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(17) "துணைப் பிரிவாக்கப்பட்ட கட்டிடம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "கூட்டாட்சி ஆதன வரைபடம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "கூட்டாட்சி ஆதன வரைபடம்" அல்லது பகுதி யளவிலான கூட்டாட்சி ஆதன வரைபடம் அல்லது தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடம்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலமும் ;

(18) "கூறு" என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன்மூலமும் ;

(19) "ஏகமனதான தீர்மானம்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன்மூலமும் :—

"அதிகாரமளிக்கப்படாத கூட்டாட்சி ஆதனம்" என்பது, கட்டிட வரைபடத்தை அங்கீகரிப்பதற்குச் சட்டத்தின்மூலம் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட செல்லுபடியுள்ள அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் அல்லது இயைபான கூட்டாட்

சியாதனத்துக்கென அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்துக்கென அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம் தொடர்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு முரணாக, கூட்டாட்சி ஆதனச் சிறுகூறுக்கான அல்லது அத்தகைய கூட்டாட்சி ஆதன சிறுகூறைச் சார்ந்த துணைச் சிறுகூறுக்கான ஏதேனும் சீர்திருத்தம் அல்லது மாற்றம், பொது அம்சங்களுக்கான ஏதேனும் சீர்திருத்தம் அல்லது மாற்றம், கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் ஏதேனும் சிறு கூறாக்கம் அல்லது உப பிரிவாக்கம் கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிச் சிறு துண்டின் மீது உப கட்டமைப்புகளின் கட்டியமைப்பு அல்லது மீளக் கட்டியமைப்பு மற்றும் கட்டுமான வேலைகளின் நிர்மாணம், அல்லது காணிச் சிறுகூறின் அல்லது ஏதேனும் கட்டிடத்தின் அல்லது அதன் ஏதேனும் கட்டமைப்பில் உள்ள பயன்பாட்டின் மாற்றம் என்று பொருளாகும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.**

**42.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அந்த அட்டவணையில் "கூறு" என்ற சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சி ஆதனச் சிறுகூறு" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அட்டவணையின் 2 ஆம் விடயத்தில் "கூட்டாட்சி ஆதன வரைபடம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக,

"கூட்டாட்சி ஆதன வரைபடம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதன வரைபடம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அட்டவணையின் 3(2) ஆம் விடயத்தை நீக்கஞ் செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(2) மூன்றுக்கு மேற்படாத சொந்தக்காரர்கள் இருக்கின்றவிடத்து, பேரவையானது எல்லாச் சொந்தக்காரர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.";

(4) அட்டவணையின் 8(5) ஆம் விடயத்தில், "பேரவையானது அதன் பொதுக்கூட்டத்தின் பின்னர்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "பேரவையானது அதன் பொதுக்கூட்டத்தின் பின்னர் முப்பது நாட்களுக்குள்ளாக" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அட்டவணையின் 9(2) ஆம் விடயத்தில், "முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் 20ஆ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) 10(2) (ஆ) என்னும் விடயத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :

"(இ) கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபையினால் செய்யப்பட்ட எழுத்திலான தேவைப்படுத்தலின்மீது மேலதிக பொதுச் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.".

**43.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

(1) அட்டவணைக்கான தலையங்கத்தில் "பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சி ஆதன வரைபடத்திலுள்ள"

என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதிவுசெய்யப் பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்திலுள்ள அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதன வரைபடத்தி லுள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது ;

(2) அவ்வட்டவணையின் 1(1) ஆம் விடயத்தில்,

(அ) "பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரை படமொன்றிலுள்ள" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சி யாதன வரைபடமொன்றிலுள்ள அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட் டாட்சி ஆதன வரைபடமொன்றிலுள்ள" என் னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) "கூறு" என்ற சொல்லுக்குப் பதிலாக, "கூட்டாட்சியாதனச் சிறுகூறு" என்ற சொற் களை இடுவதன் மூலமும் ;

(3) அவ்வட்டவணையின் (2) ஆம் விடயத்தில் —

(அ) 2(அ) (iv) ஆம் விடயத்தில் "அதன் கடமைகள் புரியப்படுவதற்காக", என்னுஞ் சொற்களுக் குப் பதிலாக, "அதன் கடமைகள் புரியப்படு வதற்காக அல்லது அதன் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுவதற்காக" என்னுஞ் சொற் களை இடுவதன் மூலமும் ;

(ஆ) 2 (ஆ) என்னும் விடயத்தில்"எல்லா வேலை களையும் உடனடியாக நிறைவேற்றுதல்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அரசாங் கத்தினால் கூட்டி. [illegible]க்கப்பட்ட அதிகார மளிக்கப்படாத [illegible] க் கட்டிட நிர்மாணங் களையும் அகற்றுதல் உட்பட, எல்லா வேலைகளையும் உடனடியாக நிறைவேற்று தல்" என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) 2(எ) எனும் விடயத்துக்கு நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ஏ) அவரது உதவுதொகையை கூட்டுத்தாபனத்தின் முகாமை நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும்; அல்லது

(ஐ) சேவை நிறுவற் கட்டணங்கள் மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, உள்ளூர் அதிகாரசபை, வேறு ஏதேனும் அதிகாரசபை அல்லது உரிமம்பெற்றவர் என்பவற்றினால் கூட்டுத்தாபனத்துக்கூடாக வழங்கப்படும் நீர், மின்சாரம் மற்றும் ஏனைய பயன்பாட்டுச் சேவைகள் துண்டிக்கப்படும் பட்சத்தில் அவற்றை மீளத்தொடுப்பதற்கான கட்டணங்கள் என்பன உட்பட, கூட்டுத்தாபனத்துக்கூடாக வழங்கப்படும் நீர், மின்சாரம் மற்றும் ஏனைய பயன்பாட்டுச் சேவைகள் போன்ற சேவைகளின் நுகர்வுக்காக எல்லா மாதாந்த இறுப்பனவுகளையும் செலுத்துதல் வேண்டும்.";

(4) அவ்வட்டவணையின் 5 ஆம் விடயத்தில் —

(அ) 5(அ) எனும் விடயத்தை நேரே உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஅ) கூட்டாட்சி ஆதனத்துக்கான அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்துக்கு முரணாகக் கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் தனிப்பட்ட சொந்தக்காரர்களினால் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களைக் கட்டியெழுப்புவதைத் தடுத்தல் ;

"(அஆ) அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டத்துக்கு முரணாகக் கூட்டாட்சி ஆதனத்துக்கு அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்துக்குச் சொல்லப்பட்ட அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்றுவதற்காக கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபையை அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது உள்ளூர் அதிகாரசபையைக் கேட்டுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கு உதவி அளித்தலும் வேண்டும்.";

(ஆ) 5(ஈ) என்னும் விடயத்துக்கு நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(உ) கூட்டாட்சி ஆதனச் சிறுகூறுகளின் சொந்தக் காரர்களுக்கு நீர், மின்சாரம் மற்றும் வேறு பொதுப்பயன்பாட்டுச் சேவைகள் வழங்குவதற்கான தேசிய நீர்வழங்கல், மற்றும் வடிகாலமைப்புச் சபை, உள்ளூர் அதிகாரசபை அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபை அல்லது உரிமம்பெற்றவர் போன்ற சேவை முகவர் நிலையங்களுக்கான முகவர் ஒருவராகச் செயலாற்றுதலும் அத்தகைய சேவை களை நுகருவதற்கான கட்டணங்களைக் கோரும் பணப்பட்டியல்களை மாதாந்தம் அல்லது பருவத்துக் குப் பருவம் அனுப்புதலும் கூட்டாட்சி ஆதனச் சிறுகூறுகளின் அந்தந்தச் சொந்தக்காரர்களிடமிருந்து அத்தகைய கட்டணங்களை அறவிடுதலும் அறவிடப் பட்ட அத்தகைய கட்டணங்களை முறையே அடுத்தடுத்துச் சேவை முகவர் நிலையங்களுக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும் :";

(5) அட்டவணையின் 6(ஆ) என்னும் விடயத்துக்கு நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(ஆஆ) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதி யளவிலான கூட்டாட்சியாதனத்தின் அங்கீகரிக்கப் பட்ட கட்டிட வரைபடத்துக்கு முரணாக அல்லது கூட்டாட்சி ஆதனச் சிறுகூறுக்கு எவையேனும் மாற்றங்களைச் செய்தல் ஆகாது.".

**44.** விடயத்துக்கேற்றாற்போல, ஏதேனும் மாகாணத்துக்கு, நிருவாக மாவட்டத்துக்கு அல்லது நிருவாகப் பிரிவுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டத்தினது ஏற்பாடுகளின் பிரயோகத்தை விஸ்தரித்து 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்படும்வரை, மேற்சொல்லப்பட்ட மாகாணத்துக்குள்ளாக, நிருவாக மாவட்டத்துக்குள்ளாக அல்லது நிருவாகப் பிரிவுக் குள்ளாக அமைந்துள்ள விடயத்துக்கேற்ப, ஏதேனும் கூட்டாட்சி ஆதனம், தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனம் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனம் தொடர்பிலான — "ஐயுறவுகளைத் தவிர்த்தல்.

(அ) கூட்டாட்சியாதன வரைபடத்தின் தற்போதைக்கான கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பகுதியள விலான கூட்டாட்சியாதனத்தின் ;

(ஆ) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின், பதிவுசெய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி யாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப் பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரை படத்தின் திருத்த வரைபடமொன்றின் ; அத்துடன்

(இ) பதிவுசெய்யப்பட்ட கூட்டாட்சியாதன வரைபடத்தின் அல்லது பதிவுசெய்யப்பட்ட பகுதியளவிலான கூட்டாட்சியாதன வரைபடத்தின் மீளப்பிரித்தல் அல்லது ஒன்றுசேர்த்தல் வரைபடமொன்றின்,

பதிவுக்கும் அது தொடர்பாகவும் (117 ஆம் அத்தியாயமான) ஆவணப்பதிவுக் கட்டளைச் சட்டம் தொடர்பிலும் ஏற்புடைய தாதல் வேண்டும்.".

**45.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.